காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

24-7-66

விலை 20 காசு



வேலூர் மாநாடு

எடுத்துச் சொல்லணும் தெரியுமா?

"வழி மறைத்திருக்குதே—
மலேபோல ஒரு
மாடு படுத்திருக்குதே"

—என்ற பாடலே வாய்விட்டு உரக்கப் பாடிக்கொண்டிருந்தார் திருவாளர் சீதாபதி.

"என்ன மிஸ்டர் சீதாபதி! என்ன, திடீர்னு தில்லேக்குப் போயிட்டே! இப்ப நீ வேலூர்லே இருந்துதானே வர்ரே...இல்லே..." -என்று மெல்லிய ஒரு இழுப்போடு நிறுத்தினர் நீலகண்டம்!

"வேலூர்லே இருந்தபடியே தில்லேக்குப் போயிட்டு வர்ரேன்! தில்லே நடராசர் சந்நிதியிலே நந்தன் பாடின பாட்டை, மாநாட்டிலே சிந்தனேச் சிற்பி சி. பி. சி. நினேவு படுத்தினதும், அதுக்கு அவர் உதாரணம் காட்டினதும் எனக்கு அப்படி நினேவு அலேயிலே என்னென்னமோ ஏற்பட்டுப் போச்சு!

"என்ன உதாரணம்! விளக்கமா தான் சொல்லேன்!"

"நான் உன்னே எவ்வளவு கட்டாயப்படுத்திக் கூப்பிட்டேன்; வந்திருந்தா சி. பி. சி.யோட அந்த பழைய முறுக்கான, சூடுக்கான பேச்சை நேரிலேயே கேட்டு ரசிச்சி இருக்கலாம்! அவரு சொன்னுரு; நந்தனுரு தெய்வ சந்நிதிக்குள்ளே போக முடியாமெ நந்திங்கிற மாடு குறுக்கே இருந்ததுபோல, நாமெல்லாம் மக்கள் சேவைக்காகச் சட்டசபைக்குப் போக "காங்கிரஸ் காளே மாடு"கள் குறுக்கே கெடக்குது; வர்ர எலெக்ஷனிலே அந்த மாட்டைக் கிளப்பி விட்டுட்டுதான் அடுத்த காரியம்ன்னு. அடடா!—என்று நிறுத்தினர்.

'பட பட'வென்று நாலேந்து பேர் சேர்ந்து கை தட்டல் ஒலி எழுப்பினர்கள். திரும்பிப் பார்த்தார் சீதாபதி. மாநாட்டுக்குப்போய்த் திரும்பிய கந்தப்பன், வேலப்பன், சாத்தப்பன், முத்துசாமி முதலியோர் சேர்ந்து வந்துகொண்டே சீதாபதியின் பேச்சுக்குக் கைதட்டினர்கள்.

அவர்களில் கந்தப்பன் என்பவன், "மாநாட்டிலே நான் கொஞ்சநேரம் ஊர்வலத்திலே நடந்துவந்த களிப்பினுலே, அசந்துட்டேன். தலேமை தாங்கின வில்லாளன் என்ன சொன்னுரு, கொஞ்சம் விவரமா சொல்லேன்"—என்ருன்.

"வாங்க அந்தப் பக்கம் ஓரமா போயி உட்காருவோம்! அங்கே எல்லாம் சொல்றேன்."

—என்று அழைத்துக் கொண்டு போய் அமர்ந்தார் சீதாபதி.

"தில்லே வில்லாளன் தலேமை உரையைப் பத்தி சொல்லறதுக்கும் விமர்சிக்கிறதுக்கும் நாளு மூணு வேணும். ஏன்னு எல்லா 'சப்ஜக்டை'யும் அவரு அலசிப்புட்டாருல்லே."—என்று ஆரம்பித்தார்.

ஏதோ கொஞ்சம் சொல்லுங்களேன்" —என்ருன் வேலப்பன்.

"ஒண்ணு சொல்றேன்; நம்ம சர்க்கார் இப்ப நாணயமதிப்பைக் குறைச்சாங்கல்ல. அது இந்த காங்கிரஸ்காரங்க ஆளவந்த நாளிலே இருந்து, அழிஞ்சிப் போகப்போகிற இந்த நாள் வரைக்கும் பெரிய பெரிய நாடுகளிலேயிருந்து சின்ன சின்ன நாடுவரைக்கும் கடன் வாங்கி வாங்கி, கடனுளியாய்ப் போயிட்டதினுலேதான்னு காரண காரியத்தோடே விளக்கினுரு.

"அப்புறம்!" என்ருன் சாத்தப்பன். "சாத்தப்பண்ணே! வெள்ளேக்காரன் நம்ம நாட்டை விட்டுப் போனப்போ நமக்கு ஆளுக்குப் 16 அவுன்சு அரிசு கிடைச்சுது. இப்ப ஆறுதானே கெடைக்குது. காங்கிரசுத் திட்டமும் ஆட்சி லெட்சணமும் தெரியலேயான்று அவர் கேட்டப்போ......"

"கேட்டப்போ......"

"காங்கிரஸ்காரங்க யாராவது கேட்டுக்கிட்டிருந்தா தூக்குதான் போட்டுக்கணும்!"

"ஆமாம்! 1967க்கு அப்புறமும் கூட காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தா, காந்தியார் கல்லறையே கூட கண்ணீர்விடும்னு சொல்லறப்போ—எனக்கே கண்ணீர் வந்துட்டுதே! — என்று குறுக்கிட்டுக் கூறினுன் முத்துசாமி!

முத்துசாமி தொடர்ந்தான்.

"ராகவானந்தம் தொழிலாளர்களேப் பத்திப் பேசுறப்போ, காமராஜ் சொன்னதுபோல, காங்கிரஸ் மட்டும் மறுபடியும் ஆட்சிக்கு வந்தா 20 வருஷத்துக்கு அதை யாரும் அசைக்கமுடியாது; ஆகையினுல தொழிலாளர்த் தோழர்களும், ஏழைப் பாட்டாளி மக்களும் தங்கள் தங்கள் எந்தக் குறையையும் கூட எடுத்துக் காட்ட முடியாதபடி சர்வாதிகாரம்தான் ஏற்படும்ன்னு சொன்னுரே! அது எப்படி?" என்ருன்.

"பின்னென்னவாம்! இந்திரா காந்தி வந்தப்போ, கருப்புக் கொடி காட்டி மனக்குறையைக் கூட எடுத்துச் சொல்ல முடியாதபடி கைது செஞ்சி ஜெயில்லே போடல்லே, இந்த பாவிங்க! ராகவானந்தம் சொன்னதுக்கு இது சாட்சி! என்ருர் சீதாபதி.

கந்தப்பன் குறுக்கிட்டு, 'ஆமா மாம்! நான் அப்பல்லாம் முழிச்சிக் கிட்டேன். தி.மு.க. கொள்கையை விட்டுட்டு, விட்டுட்டுன்னு அந்த கொள்கை வீரன்ங்க புட்டுப்புட்டு வச்சிக்கிட்டு வாராங்களே, அவங்களுக்கு சரியான சாட்டை அடியா ஆசைத்தம்பி பேச்சு இல்லே!' என்ருன்.

சீதாபதி, "பின்னென்ன! 1954-லே காங்கிரஸ்காரங்க, அண்ணுவுக்கும், கலேஞருக்கும், ஆசைத்தம்பிக்கும், அபராதம் விதிச்சதும், அபராதம் கட்டாததினுலே ஜப்திசெய்ய வந்ததும் ஆசைத்தம்பி வீட்டுக்கு வந்து மூக்குடைஞ்சித் திரும்பியதும், காங்கிரஸ் எத்தனேத் தடவை, எங்கெங்கே கொள்கையை விட்டுட்டுன்னு அவரு கேட்டாரே! நாம விட்டுடலியே! வழியை, முறையை கொஞ்சம் மாத்திக்கிட்டுத்தானே இருக்கோம்'ன்னு அவரு எவ்வளவு ஆணித்தரமா பேசினுரு! ஆமாம், தென்னரசு ரெத்தம் தெறிக்கிருப் போல பேசினுரே—நீ கவனிச்சியா! என்று நிறுததினர்.

உடனே சாத்தப்பன் வேகமாக எழுந்து நின்று, ஒருகையை இடையில் வைத்துக்கொண்டு, எதிரே 'மைக்' இருப்பதுபோல பாவனே செய்துகொண்டு

"மாநாட்டுத் தலேவர் அவர்களே! அறிஞர் அண்ணு அவர்களே!! தோழர்களே! தாய்மார்களே!"

—என்று தொடங்கினுன்.

"சாத்தப்பண்ணே! பேச்சு உங்க வாயிலே இருந்து இப்படி

(13-ம் பக்கம் பார்க்க)

வேகமும் மோதலும்?

மக்கள் சமூகம் பரபரப்பு அடைகிறபோது அதைக்கண்டு கலங்க வேண்டாம். மௌனம்தான் பயங்கரமானது. உயி ரோட்டமும், ஆர்வமும் உள்ள மனிதர்களின் வேகமும், கருத்துக்களின் மோதலும் உண்மைக்கு விறு விறுப்பு ஊட்டி, தூய்மைப்படுத்தி அதை நிலை நிறுத்தும்.

—பீச்சர்

காஞ்சி

மலர் 2 24—7—66 இதழ் 52

"ஓட்டு" முறை

தண்டவாளங்களைப் பெயர்த்துவிடுவது தவறு: பயணம் செய்வோருக்கு ஆபத்து ஏற்படும்.

தந்திக் கம்பிகளை அறுப்பதிலும் தபால் கருவிகளைச் சேதப்படுத்துவதிலும், ஆபத்து இல்லை.

ஆனால் தபால் தந்திக் கருவிகளை சேதப்படுத்துவதைக்கூட இப்போது செய்யவேண்டாம். அதற்கு உரிய காலம் வருகிறபோது நானே செய்யச் சொல்லுவேன்; செய்யலாம்!

டாக்டர் ராம்மனோகர் **லோகியா** உள்ளத்தில் பட்டதை ஒளிவு மறைவு இல்லாமல் பேசுபவர்.

இரு பொருள்தரும் பேச்சோ, உட்பொருள் மறைபொருள் கொண்ட பேச்சோ அவருக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. பூசிமெழுகுவதும், அவர் முறை அல்ல. அவருடைய பேச்சினைத்தான் துவக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

இப்படி ஒரு அரசியல்கட்சியின் தலைவர், பொறுப்பு உணர்ந்தவர் பேசலாமா என்று காங்கிரசின் பெருந்தலைவர்கள் கேட்டிடின், டாக்டர் லோகியா மழுப்பமாட்டார், குழப்பமாட்டார்; உங்களுடைய ஆட்சியின் இலட்சணத்தைக் கவனித்துக் கணக்கெடுத்து அதற்கு ஏற்றவிதமான எதிர்ப்புத் திட்டத்தைத்தான் தயாரிக்கிறேன், தவறுஎன்ன? பொறுப்பை மறந்து, இறுமாந்துகிடந்திடும் உங்களை உருட்டிவிட எந்த முறையையும் கையாளுவேன்! என்றுதான் பதில் அளிப்பார்.

> கிளர்ச்சிகள் நடைபெற ஒட்டாது தடுக்கும் நோக்கத்துடன் இந்த அரசு, முன் கூட்டியே பலரைக் கைது செய்துகொண்டிருக்கிறது. கிளர்ச்சி செய்திடும் ஜனநாயக உரிமையைப் பறிக்கிறது. இந்தப் போக்கிலேயே காங்கிரஸ் அரசு நடந்துகொள்ளுமானால் இனி எதிர்க்கட்சிகள் கிளர்ச்சிகளை வெற்றியுடன் நடத்துவதற்காக, இரகசியத் திட்டம் தயாரித்துக்கொண்டு, அதற்காக ஒரு அணியையும் அமைத்துக்கொள்ள வேண்டியதுதான்—காங்கிரஸ் ஆகஸ்ட்டு புரட்சி நடத்தியபோது அமைத்துக்கொண்டதுபோல!

விளக்கமாகவே கூறிவிட்டார், விளைவுபற்றிய அச்சம் இல்லாததால்.

டாக்டர் லோகியா இப்படித்தான் 'ஏட்டிக்குப் போட்டியாக' எதையாவது பேசிவைப்பார் என்று அலட்சியமாகக் கூறிடுவோர் உளர்.

ஆனால் டாக்டர் லோகியா காட்டுப்போக்கினருமல்ல, நாட்டு நிலைமைகளை உணராதவரும் அல்ல, உலகில் ஆங்காங்கு பல்வேறு கட்டங்களிலே நடைபெற்ற உரிமைப்போரின் வரலாறு அறியாதவரும் அல்ல. அவருடைய 'வாதம்' அபத்தமானது என்று கூறிடவும் முடியாது.

ஒரு ஆட்சி, மக்களின் கருத்துக்கும், எதிர்க்கட்சிகளின் முறையீடுகளுக்கும் மதிப்பளிக்க மறுத்து, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரவலிவினை, அறநெறியைக்கவனியாது, வீசிடுமானால், அந்தஆட்சி, நீடித்திருக்கும் தகுதியைத்தன்னாலே இழந்துவிடுகிறது, பிறகு அந்த ஆட்சியை அகற்றுவதற்கு எந்த முறையைக் கையாளவும் மக்களுக்கு உரிமைகிடைத்து விடுகிறது என்ற வாதம், பொருளற்றது அல்ல. அதனை உணர்ந்தே டாக்டர் பேசுகிறார்.

டாக்டர் லோகியாபற்றி கூறிட முற்படுவது போலக்கூட நேற்றுவரை காங்கிரஸ்காரராக இருந்தவரும், கவர்னர்பதவி பெற்றிருந்தவரும், ஒரிசா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், இப்போது பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ள **அரிகிருஷ்ண மேதாப்**பற்றிக் கூறிடமுடியாது. அவர் சென்றகிழமை பேசியிருப்பதைப் பார்த்தால், டாக்டர் லோகியா கொண்டுள்ள போக்கு பரவிக்கொண்டுவருகிறது; வலிவு பெற்றுக்கொண்டு வருகிறது என்றே தோன்றுகிறது.

> இலஞ்ச இலாவண முறை காரணமாக அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிடுமானால், பிறகு மக்கள் அக்ரம ஆட்சியை அகற்றிட புரட்சி செய்திட வேண்டியதுதான். நியாயமான முறையினால் ஒரு அக்ரம ஆட்சியை அகற்ற முடியாது போய்விடுமானால், புரட்சி நடத்தி அக்ரம ஆட்சியை அகற்றிடும் உரிமையை மக்கள் பெற்றுவிடுகிறார்கள். புரட்சி நடத்திட வேண்டியதுதான்.

அரிகிருஷ்ண மேதாப், சட்டம் ஒழுங்கு பற்றியோ, அமைதி அரசியல் முறைபற்றியோ அறியாதவர் என்று கூறிட முடியாது.

நாட்டு விடுதலையில் நாட்டம் காட்டாதவர் என்றோ, இன்னல் இழப்புகளை ஏற்றுக்கொள்ளாதவர் என்றோ கூறிட முடியாது.

காங்கிரஸ் கட்சியிலே உள்ள முன்னணியில் இடம்பெற்றவர், **மேதாப்.** விழாவும் விருதும் பெறுபவர்களுக்கு உள்ள தகுதியும் திறமையும் மேதாப்புக்குக் கிடையாது என்று தருக்கரும் கூறிடத் துணியமாட்டார்கள். அத்தகைய மேதாப், தாம் கூறுவதன் பொருளை உணர்ந்தே கூறியிருக்கிறார் புரட்சி மூளும் என்று.

டாக்டர் லோகியாவும் மேதாபும் கூறியுள்ளவைகளுக்காகவே அவர்கள் மீது அடக்குமுறையை அவிழ்த்துவிடலாம் ஆட்சியினர்.

தெரிந்தும், துணிந்தும், தெளிவுடனும், திட்டவட்டமாகவும் அவர்கள் பேசியுள்ளனர்.

அவர்களை அந்த இடத்துக்குத் துரத்திவிட்டிருக்கிறது, துரைத்தனம். ஆட்சியிலே அமர்ந்திருப்பதாலேயே அவனி முழுவதிலும் தம்மை ஒத்த அறிவாளர் வேறு எவருமே இல்லை என்ற அகம்பாவம் கொண்()விட்டனர் ஆளவந்தார்கள். அதனால் எத்தனை இதமாகவும் பதமாகவும் கருத்துரைத்திடினும், துளியேனும் மதித்திட மறுக்கின்றனர். ஜனநாயகப் பண்பினை மாய்க்கின்றனர். ஆட்சியினர் அந்தப் போக்கு கொண்டிடின், ஜனநாயக உரிமையை உயிருள்ள தாக்கிக்கொள்ள எதையும் செய்தாகவேண்டும் என்ற போக்கினைத்தானே எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுவிடும்?

டாக்டர் லோகியாவும் மேதாபும் இந்தப் போக்கைத்தான் தமது எச்சரிக்கை மூலம் எடுத்துக் காட்டுகின்றனர்.

இவர்கள் எதற்கும் துணிந்தவர்கள், ஆகவே இவ்விதம் பேசுகின்றனர். மக்கள் அவ்விதமான இயல்பினர் அல்ல என்று ஆட்சியாளர் எண்ணிக்கொண்டிருக்கக்கூடும். ஏமாளித்தனம் என்போம் அந்த எண்ணத்தை.

மக்கள் இன்றையத்தினம் எதற்கும் தயாராகிவிட்டுள்ளனர். மக்களை இதுநாள் வரையில் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த அச்சம் இன்று அகன்றுவிட்டிருக்கிறது.

முன்பு போலீஸ் கொட்டடி என்றாலே பீதி அடைந்த மக்கள், இன்று "புறப்படு போவோம் உன் கொட்டடிக்கு!" என்று கூவிடும் நிலை பெற்றுவிட்டனர். சிறை பற்றிய அச்சம் அடியோடு போய்விட்டது.

சாகடித்து விடுவார்களோ என்ற பயம் மட்டும் இருந்தது; காங்கிரஸ் அரசு கண்மண் தெரியாமல் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை காரணமாக, சாவு பற்றி இருந்துவந்த அச்சமும் பெரும் அளவு போய் விட்டது.

காங்கிரசாட்சி ஏற்பட்டதிலிருந்து, துப்பாக்கிக்குப் பலியானவர்களின் தொகையைக் கணக்கெடுத்துவிட்டார்கள் மக்கள். பீதி, முதலில்! வேதனை, பிறகு! இப்போது, துணிவு! **சாகத்துணிந்துவிட்டனர்!!** கடைசிக் கட்டும் அறுபட்டுக்கொண்டு வருகிறது.

தமிழகத்திலே பக்தவத்சலனாராட்சி நடத்திக் காட்டிய அடக்குமுறையின்போது, துப்பாக்கி பேசிற்று, பிணம் கீழேவீழ்ந்தது. ஆனால் மக்கள் பீதி அடைந்து ஓடிடவில்லை, சுடு! என்று துணிந்து கூறினர். ஒரே ஊரில் ஒரே நாளில் இருமுறை மும்முறை துப்பாக்கித் தூக்கிற்று துரைத்தனம்; சாகத் துணிந்து நின்றனர் சாமான்யர்கள்.

இந்த நிலை விரும்பத்தக்கது என்றோ, பாராட்டத் தக்கது என்றோ நாம் கருதவில்லை.

சாகவும் துணிந்துவிட்ட நிலை பிறந்திருப்பது, எதனைக் காட்டுகிறது? ஆட்சியினால் அலைக் கழிக்கப்பட்ட மக்கள், கடைசிக் கட்டத்தை நோக்கி நடைபோடத் துணிந்துவிட்டார்கள் என்பதனை. நடைப்பிணமாகிக்கிடப்பதைக் காட்டிலும், உரிமைக்காகப் போராடி உயிரிழப்போம் என்ற உறுதி பிறந்துவிட்டது என்பதனை.

இதனையும் உணர்ந்ததாலேயே லோகியாவும் மேதாபும் புரட்சி மூண்டிடும் என்று எச்சரித்துள்ளனர்.

இந்தத் தீதான கட்டம் வாராது தடுக்கப்பட்டாக வேண்டும். இரத்தக்களறி மூலம் மட்டுமே பரிகாரம் கிடைத்திடமுடியும், நீதி நிலை நாட்டப்படமுடியும் என்ற நிலை இருத்தலாகாது. **அதற்கு உள்ள ஒரே வழி —நல் வழி — அறவழி—அடுத்தப் பொதுத் தேர்தலிலே ஓர் பேரணி திரண்டு அக்ரம ஆட்சி நடத்திடுவோரை வீழ்த்தியாகவேண்டும்.** வேட்டு முறை, எந்தப் பிரச்சினைக்கும் நிரந்தரமான பரிகாரத்தைத் தந்திடாது, சட்டத்தின் துணையுடன் நடத்தப்படும் வேட்டு முறையென்றாலும் சரி, அல்லது புரட்சி மூட்டிவிட்டு மக்கள் மேற்கொள்ளும் வேட்டு முறை என்றாலும் சரி.

'ஓட்டு' முறை மூலமாகவே ஓட்டிட முடியும், நாட்டினுக்குத் தொடர்ந்து கேட்டினை மூட்டி வரும் ஆட்சியினை.

இதற்கு மக்களைப் பக்குவப் படுத்திடும் பணியினை மேற்கொண்டிடின்—அந்தப் பணியில் வெற்றி கிடைத்திடின், தந்திக் கம்பிகளை அறுக்காமல், தபால் நிலையங்களைத் தாக்காமல், இரகசிய முறைகளைத் தேடாமல், புரட்சி மூட்டிடாமல், புது ஆட்சி அமைத்திட முடியும்.

அந்த நம்பிக்கையுடன்தான் தி. மு. கழகம் பணியாற்றிக் கொண்டு வருகிறது.

"காஞ்சி"
இரண்டாம் ஆண்டு மலர்
அண்ணாவின்
அரிய பல படைப்புக்களுடன்
முன்னணியினர் பலரது கதை, கட்டுரை, கவிதை முதலானவைகளும்
மிளிர மலர் மணம்மிகத் தயாராகிறது!

தம்பி

நள்ளிரவு ஆகிவிட்டதே, இப்போதாகிலும் எழுதப்போகலாமா என்று எண்ணிக் கொண்டேன், ஆனால் பேச்சின் சுவை என்னை மேலும் பேசவைத்துவிட்டது; மணி இப்போது இரண்டு; இதுவரை என்னோடு பேசிக்கொண்டிருந்த அன்பழகன் இப்போதுதான் வீடு சென்றார், நான் எழுத உட்கார்ந்தேன். வேலூர் மாநாட்டுச் சிறப்பு குறித்தும் அடுத்து நடைபெற இருக்கும் சிவகெங்கைமாநாடு, கள்ளக்குறிச்சி மாநாடு, பொள்ளாச்சி மாநாடு ஆகியவைகள் குறித்தும் பேசத்தொடங்கி கழக வரலாறு, வளர்ச்சி, எதிர்காலம், அரசியலில் உருவாகிக்கொண்டு வரும் சூழ்நிலைகள் ஆகிய பல பற்றிப் பேசினோம்.

கருப்பு மல்லி!

உள்ளத்திலே தோன்றுவதை ஒளிவு மறைவில்லாமல் பேசுபவர் அன்பழகன். அவரிடம் கழகப் பிரச்சினைகள் பற்றி பேசுவதிலே எனக்குத் தனியான விருப்பம் உண்டு; ஆகவே நேரம் ஓடுவதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்துவிட்டேன்; பேசப் பொருள் நிரம்ப இருக்கிறது, நேரம்தான் இல்லை. அவரிடம் பேசுவது மட்டுமல்ல, தம்பி! நாட்டு மக்களிடம் நாம் பேசுவதற்கு உள்ள பிரச்சினைகள் நிரம்ப உள்ளன; போதுமான நேரம் இல்லை. காலம் கடுவேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது; செய்து முடிக்கவேண்டிய காரியங்களோ அளவிலும் வகையிலும் அதிகமாகிக்கொண்டே உள்ளன. என்ன செய்வது! அமைச்சர்களைப்போலவோ காங்கிரசின் பெருந்தலைவர்களைப்போலவோ

ஆமாம்! அப்படித்தான்!
அதனால் என்ன!
ஆகட்டும் பார்க்கலாம்!!

என்று பேசிவிட முடிகிறதா! ஒவ்வொரு பிரச்சினைக்கும் விளக்கம் — கேட்போர் ஒப்புக்கொள்ளத்தக்க விதமான விளக்கம்—தரவேண்டி இருக்கிறது. பிரச்சினைகளோ சிக்கல் மிக்கனவாகிவிட்டுள்ளன; பொதுமக்களுக்கோ அவைகளை ஆராய்ந்துகொண்டிருக்கப் போதுமான நேரமோ மன அமைதியோ கிடைப்பதில்லை. வாழ்க்கையின் சுமை அவ்வளவு அழுத்துகிறது; அல்லல்கள் அவர்களுக்கு அடுக்கடுக்காக.

ஆளுங்கட்சியினரோ பல பிரச்சினைகள் சிக்கலாகிவிட்டிருக்கின்றன என்று தெரிந்தும், துளிக்கூடத் திகைப்பு கொள்ளாமல், எல்லாம் தன்னாலே சரியாகிவிடும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

பிரச்சினைகள் உள்ளன என்று ஒப்புக்கொள்வதற்குக்கூட அவர்களுக்கு மனம் வருவதில்லை; மறைக்கப்பட முடியாதவிதமாக பிரச்சினைகள் அழுத்த ஆரம்பித்த பிறகுதான், பிரச்சினை இருப்பதாகவே ஒப்புக்கொள்கிறார்கள். ஒப்புக்கொண்ட பிறகாகிலும், தக்க பரிகாரம் தேட முற்படுகின்றனரா என்றால், இல்லை! அப்படித்தான் இருக்கும் என்று கூறிக்கொண்டே காலத்தை ஓட்டப் பார்க்கிறார்கள்; பிறகு என்ன பரிகாரம்தேடலாம் என்பதுபற்றி ஆராய ஒரு கமிட்டி அமைக்கிறார்கள்; பிறகு கமிட்டியின் கருத்து பற்றி விவாதிக்கிறார்கள்; பிறகு பரிகாரத்துக்கான முறைபற்றி அறிவிப்பு அளிக்கிறார்கள்! செயல்படத் தொடங்குவதோ மிகுந்த காலதாமதத்துக்குப் பிறகு; செயல் மூலம



கிடைத்திடும் பலனே, மலையைக் கெல்லி எலி பிடித்த கதை கூறுவார்களே அதுபோல!! ஏன் இந்த அலட்சியப் போக்கு ஏற்படுகிறது என்றால்,

> அல்லலைத் தாங்கிப் பொறுத்துக் கொண்ட மக்கள், மேலும் சில காலம் அல்லலைத் தாங்கிக்கொள்வார்கள்.

> தாங்க முடியாத அளவுக்கு அல்லல் வளர்ந்தாலும் மக்கள் சீறிஎழமாட்டார்கள்.

> சீறி எழுந்திடினும் அவர்களை அடக்கி ஒடுக்கிட நம்மிடம் அடக்குமுறை இருக்கிறது.

> அடக்குமுறை ஆட்சியை மாற்றிடத் தக்க ஆற்றல் நாட்டிலே எழவில்லை.

என்ற இந்த எண்ணம் ஆட்சியினருக்குத் தடித்துவிட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் மக்களைப்பற்றிய கவலையற்று, இருக்கின்றனர்.

> ஜனநாயகத்திலே இந்த நிலை வளர்ந்துவிடுவது, பேராபத்தை மூட்டிவிடும்.

> வளைக்க முடியாதது பிறகோர் நாள் முறிக்கப்பட்டுப் போகும் என்பதுபோல, ஆட்சியைத் திருத்த இயலாமல் போய்விடுமானால், சட்டம், சமாதானம், ஒழுங்கு, அமைதி ஆகியவைகள் அழியினும்சரி, பரிகாரம் தேடித் தீரவேண்டும் என்ற ஆத்திர உணர்ச்சி மேலோங்கும்.

> அந்த நிலை சமூகத்தின் கட்டுக்கோப்பையேகூடக் கெடுத்துவிடும்.

மக்களை வாழவைப்பதிலே வெற்றிபெறத் தவறிவிடும் துரைத்தனத்தை மாற்றி அமைக்கும் அதிகாரம் பெற்றுள்ள பொதுமக்கள், அறிவாற்றலுடன் பணியாற்றி ஆட்சியை மாற்றிட முனையவேண்டுமேயன்றி, நம்மால் ஆகுமா என்று நெடுங்காலம் பெருமூச்செறிந்து கொண்டிருந்துவிட்டு, பிறகோர் நாள் எரிமலையாகி விடுகிற போக்கு கூடாது.

இவ்விதமான போக்கு எழும் என்று, அந்தப் போக்கு வெடித்துக் கிளம்புகிற வரையில், எந்தக் கொடுங்கோலரும் எதிர்பார்ப்பதில்லை; யாரேனும் துணிந்து எச்சரித்தாலும், ஏளனம் செய்வர்; நம்பிட மாட்டார்கள்,

> ஊமைகளா இத்தனை முழக்கம் எழுப்புகிறார்கள்!

> அடங்கிக் கிடந்தவர்களா இத்தனை ஆர்ப்பரிப்புச் செய்கின்றனர்!

> சவுக்கடிக்கு நடுங்கிக் கொண்டிருந்தவர்களா இன்று துப்பாக்கிக்கு மார் காட்டுகின்றனர்!

> அடி பணிந்து கிடந்தவர்களா இன்று, முடி பறிப்பேன் என்று கூவுகின்றனர்!

என்று வியந்துதான் கொடுங்கோலர் கேட்டனர், ஒவ்வொரு புரட்சி வெடித்தபோதும்; இப்படித்தான் நடக்கும் என்று முன்பே தெரியும் என்று எந்தக் கொடுங்கோலனும் கூறினதில்லை.

முடியாட்சிக் காலத்திலே முரட்டுப் போக்கு சாரணமாக இருந்து வந்தது குருட்டுப் போக்கு.

குடியாட்சிக் காலத்திலே முரட்டுப் போக்கு காட்ட இயலுவதில்லை; முறை மாறியிருக்கிறது. நெறித்த புருவம் அல்ல! புன்னகை! பாகுமொழி! இவைகளைக் கருவியாக்கிக் கொண்டு மக்களை மயக்கி, கட்டுப்படுத்துவதிலே முனைகின்றனர்.

முரட்டுப் போக்குடன் முடிதரித்தோன் நடந்து கொண்டால், பல கொடுமைகளைத் தாங்கித் தவித்த மக்களிடமிருந்து ஓர் நாள், எதற்கும் அஞ்சாத ஓர் வீரன் எழுவான்! கொடுங்கோலன் வீழ்வான்! இடையே இரத்தம்! தீ! பலி! நிறைய!!

மக்களைத் தமது புன்னகையாலும் பாகுமொழியாலும் மயக்கிடும் போக்கிலே குடியாட்சிக் கோமான்கள் நடந்திடும்போது, எதிர்ப்பு உணர்ச்சி மங்கிவிடுவது இயல்பு. இந்த இயல்பு காரணமாகவே, அல்லல் பல தொடர்ந்து கிளம்பித் தாக்கியும், மக்கள், இந்தக் கொடுமைகளை மூட்டிவிட்ட ஆட்சியினருக்கு எதிராகப் பொங்கி எழ முடியாதவர்களாகின்றனர்.

> இதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஆளவந்தார்கள் தமது பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டு வருகின்றனர்.

ஆனால் தம்பி! மெள்ள மெள்ள அந்த மயக்கம் நீங்கிக் கொண்டு வருகிறது; தெளிவும் துணிவும் மிகுதியாகிக் கொண்டு வருகிறது. இனி நீண்டநாட்களுக்கு மக்களை மயக்கிக் கொண்டிருக்க முடியாது பழைய பேச்சினால் என்றுகண்டுகொண்ட காங்கிரஸ்கட்சியினர் இப்போது புதிய மயக்கம் தரும் பானத்தைத் தயாரித்துத் தருகின்றனர்; இந்த மயக்க மருந்து இன்னும் சிலகாலம் வேலை செய்யும் என்று நம்பிக்கொண்டும் இருக்கின்றனர். அந்த மயக்க மருந்துதான், தம்பி! இப்போது இவர்கள் வெகுவேகமாகப் பேசிக்கொண்டிருக்கும்; **ஜனநாயக சோஷியலிசம்** என்பது.

பழைய மயக்க மருந்து வேலை செய்வதில்லை; முன்பு போல!

'சுயராஜ்யம்' என்ற சொல் காதில் பாய்ந்ததும், காதில் தேன் வந்து பாய்ந்திடும் நிலை; முன்பு!!

சுயராஜ்யம் வருகிறது! என்று அறிவித்ததும், பொதுமக்கள் கண்முன்பு, அவர்கள் மனதிலே இருந்து வந்த ஆசைகள் அவ்வளவும் வடிவம் கொண்டு நின்றன!

சுயராஜ்யம் வருகிறது, இனி வறுமை இல்லை, வாட்டம் இல்லை, வரிக் கொடுமை இல்லை; உண்ண உணவு, உடுக்க உடை, குடி இருக்க வீடு, செய்யத் தொழில், தொழிலில் நீதி நிம்மதி எல்லாம் கிடைக்கும் என்று மக்கள் நம்பினர்.

அத்தகைய ஒரு இன்ப வாழ்க்கையைப் பெற்றுத் தந்திடுவோர் காட்டிடும் பாதை நடந்திடுவோம், கேட்டிடுவதைத் தட்டாமல் தயங்காமல் கொடுத்திடுவோம் என்று சூளுரைத்தனர்; செயல்பட்டனர்.

சுயராஜ்யம் வந்தது! கொட்டு முழக்குடன்! கோலாகல விழாவுடன்! கொடி பறந்தது, பட்டொளி வீசி! கூனன் நிமிருவான்! குருடன் பார்வை பெறுவான்! என்றனர்குதூகலத்துடன். ஆடுவமே! பள்ளுப் பாடுவமே! ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்பதாகக் கவிதைகள் இசைக்கப்பட்டன! ஒளிமயமான எதிர்காலம் தெரிந்தது. மனக்கண் முன்பு! ஆனால், நாட்கள் உருண்டோடின, ஆண்டுகள் புரண்டோடின, ஆசைக் கனவுகள் நிறைவேறவில்லை. அல்லல் அகலவில்லை, தொல்லை தொடர்ந்தது; சுயராஜ்யம் என்றால் சுகராஜ்யம் என்று எண்ணிக் கொண்டிருந்தோமே, ஒரு சுகத்தையும் காணவில்லையே, கண்ணீர் விட்டா வளர்த்தோம், செந்நீர் விட்டல்லவா

வளர்த்தோம் சுதந்திரத்தை, நமக்கு ஒரு பயனும் கிடைக்கக் காணோமே என்று ஏக்கப்பட்டனர் மக்கள்.

ஆனால் இதுதானா ஐயா! சுயராஜ்யம்!
என்று கேட்கக் கூச்சம்!! அச்சம்!!

ஒரு நூற்றாண்டாக உம்மைக் கப்பிக் கொண்டிருந்த அவதிகள் சுயராஜ்யம் கிடைத்த மறுநாளேவா ஓடிவிடும்! காலம் வேண்டும் நண்பர்களே! காலம் வேண்டும்! வேலையைத் தொடங்கிவிட்டோம், விரைவிலே பலனைக் காணப் போகிறீர்கள். அதற்குள் அவசரப்படாதீர்கள் என்று அன்று தலைவர்கள் சொல்லக் கேட்ட மக்கள், "ஆமாம்! அவசரப்படக்கூடாது!!" என்று கூறினர்; பொறுத்துக் கொண்டனர்; எதிர்பார்த்தது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்

ஆனால் ஆண்டுகள் பதினெட்டுக்கு மேலாகிவிட்ட பிறகும் எதிர்பார்த்த இன்ப வாழ்வு கிடைக்காமல் போனதையும், அதேபோது ஒரு சில செல்வந்தர்களுக்கும், ஆளுங் கட்சியின் ஆலவட்டங்களுக்கும் இன்ப வாழ்வு கிடைத்திருப்பதையும் கண்ட மக்கள், வெகுண்டு எழுந்து, இதற்குப் பெயர்தான் சுயராஜ்யமா! என்று முழக்கமிடலாயினர்! சுயராஜ்யம் என்ற சொல்லால் மயக்கினீர்கள் — கண்டு கொண்டோம்; மயக்கத்தின் பிடியிலிருந்து இதோ விடுபட்டோம்; காட்டுக்கணக்கினை! என்று மக்கள் கேட்டிடலாயினர். ஓ! ஓ! பழைய மயக்க மருந்து போதுமானதாக இல்லை; புதிதாக ஒன்று தந்தாக வேண்டும் என்பதனை அறிந்த தந்திரத் தலைவர்கள், ஜனநாயக சோஷியலிசம் என்ற சுவையினையே மயக்க மருந்து ஆக்கித் தர முயன்று கொண்டிருக்கின்றனர்.

நாளைக்கு ஒரு சூரணம் தருகிறேன், அதனைத் தேனிலே குழைத்து மூன்றே வேளை சாப்பிடு, நோய் கட்டாயம் பறந்துபோகும்—என்று மருத்துவர் சொல்லும்போது, இவ்வளவு நாள் இவர் கொடுத்த மருந்து துளியும் பயன் தரவில்லையே; ஒவ்வொரு வகையான மருந்து தருகிறபோதும் இதுபோலத்தானே இவர் கூறினார் என்ற எண்ணம் எளிதிலே ஏற்பட்டுவிடுவதில்லை. இந்த மருந்தாவது வேலை செய்கிறதா பார்க்கலாம்! மருத்துவர்தான் இவ்வளவு நம்பிக்கையுடன் சொல்லுகிறாரே, இதைச் சாப்பிட்டுப் பார்ப்போம் என்றுதான் எண்ணம் கொள்ளச் செய்கிறது. மனித இயல்பு! அதிலும் நம்முடைய நாட்டு மக்களின் இயல்பு பற்றிக் கூறிடவா வேண்டும்!!

இதிலாவது பலன்கிடைக்கிறதா பார்க்கலாம், இவராலாவது நலன் கிடைக்கிறதா பார்க்கலாம் என்று எண்ணிக் கிடந்திடும் போக்கு; மிகுதியாக. அந்த இயல்பைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி தமது சொல்லை மாற்றிக்கொண்டு வருவதிலே வல்லவர்கள், நம்மை ஆண்டுகொண்டுள்ளவர்கள்.

நாம் தம்பி! மக்களின் அந்த இயல்பையும் மாற்ற வேண்டி இருக்கிறது; ஆளவந்தார்களின் போக்கையும் திருத்தவேண்டி இருக்கிறது.

துவக்கத்திலே இதுகுறித்து அக்கறைகாட்டாமலிருந்துவந்த மக்கள் இப்போது நாம் எடுத்துச் சொல்வதைக் கேட்டுத் தெளிவுதேடிக்கொள்வதிலும், அதன் காரணமாகத் தமது இயல்பை மாற்றிக்கொள்வதிலும் முனைந்து நிற்கின்றனர். இதனை நாம் பொதுக் கூட்டங்களில் காணுகின்றோம். மாநாடுகளிலே இதனை மிக விளக்கமாகக் காணுகின்றோம்.

வேலூர் மாநாட்டிலே, மக்கள் காட்டிய இந்த அக்கறை குறித்து நான் அன்பழகனுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அங்கு அவர் தந்த விளக்க உரைக்காகப் பாராட்டினேன். அன்று அவருடைய பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஜனநாயக சோஷியலிசம் பேசுகிறது இந்தக் காங்கிரஸ்ஆட்சி; ஆனால் அதனுடைய செயலிலே ஜனநாயகமும் இல்லை, சோஷியலிசமும் காணோம் என்பதற்கான விளக்கத்தை அவர் மிகத் தெளிவாகத் தந்திருந்தார்.

எதிர்க்கட்சிகள் வளருவது கண்டாலே எறிந்து விழும் போக்கும், ஆங்கு உள்ளவர்களை வலைவீசிப் பிடிக்கும் போக்கும், ஜனநாயகமாகுமா!

நாட்டை ஆளும் தகுதியும் திறமையும் தமக்கன்றி பிறர் எவருக்கும் இல்லை என்று பேசிடும் அகம்பாவம் ஜனநாயகமாகுமா!

மன்னன் மகேசன் பிரதிநிதி! அரசன் ஆண்டவனுக்குத்தான் பதில்கூறவேண்டியவன்; மக்களுக்கு அல்ல! மன்னன் செய்திடும் காரியம் கொடுமை உள்ளதாயினும் எதிர்த்திடலாகாது; முறையிட்டுக்கொள்ளலாம்; கடவுளை வேண்டிக்கொள்ளலாம்—என்ற தத்துவத்தின்மீது பலப்பல நூற்றாண்டுகளாகக் கட்டப்பட்டு, கெட்டிப்படுத்தப்பட்டிருந்த முடியாட்சி முறையை உடைத்தெறியுமுன்பு பல ஆயிரவரின் மண்டைகள் பிளந்தெறியப்பட்டன! எவ்வளவோ இரத்தத்தைக் குடித்துக் கொக்கரித்து, பிறகே முடியாட்சி முறை மலர்ந்தது.

முடியாட்சியிலே நெளிந்துகொண்டிருந்த கருத்து, மெள்ள மெள்ள குடியாட்சியிலும் தலைகாட்டுகிறது என்றுதானே கூறவேண்டும், இன்றைய ஆட்சியாளர்கள், தாங்கள் மட்டுமே ஆளப்பிறந்தவர்கள் என்று ஆணவம் கக்கும்போது! அந்தப்போக்கு, ஜனநாயகமாகுமா!

அத்தகைய போக்கினை மேற்கொண்டு விட்டவர்கள், ஜனநாயகப் பாதுகாவலர்கள் என்று வேறு தங்களைக் கூறிக்கொள்கின்றனர்.

மக்களின் ஆதரவினைப் பெற்றிடும் வாய்ப்புப் பெற்ற எவரும் நாடாளும் தகுதி பெறுகின்றனர்; மக்களின் நல்வாழ்வுக்கான முறையிலே ஆட்சி நடத்திடும் எவரும், மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற்றிடும் தகுதியைத் தேடிக்கொள்கின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியாளர்களோ, நாட்டிலே வேறு யாருக்குமே நாடாளும் தகுதி இல்லை என்ற அகம்பாவம் பேசி, நாட்டை ஆண்டுகொண்டுவருகின்றனர்; தொடர்ந்து.

உள்ளபடி, எவர் ஆட்சி நடத்தினாலும் அவர்களின் திறமையால் கிடைத்திடும் பலனைக்காட்டிலும் மிகுதியான பலன் கிடைத்திடத்தக்க முறையிலே ஆட்சி நடத்திட மற்றொரு கட்சியினர் வாய்ப்புப் பெற்று, பழய ஆட்சியுடன் புதிய ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தால் மட்டுமே, நாடாளும் தகுதி உள்ளவர்கள் எவர் என்பதுபற்றிய உண்மையான மதிப்பீடு கிடைத்திட முடியும்.

ஓட்டப்பந்தயத்தில் ஒன்பதுபேர் கலந்து கொண்டால்தான், யார் அதிக வேகமாக ஓடுகிறார்கள் என்று கண்டறிந்து பரிசளிக்க முடியும். பந்தய மைதானத்திலே நுழையும் தகுதி எனக்குமட்டுமேஉண்டு என்று கூறிக் கொண்டு ஒரே ஆசாமி திடலிலே ஓடுகிறான் என்றால், கேலிக் கூத்தாக அல்லவா கருதிடுவர்.

ஆனால் அத்தகைய முறையைத்தான் காங்கிரஸ் ஆட்சியினர், ஜனநாயகம் என்று கொண்டுள்ளனர். அது ஜனநாயகம் ஆகாது. மக்கள் இதனை அறிந்துகொண்டதால்தான், எதிர்க்கட்சிகளின் பக்கம் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்சி மாறவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆகவே மக்களை மறுபடியும் ஒரு மயக்கத்தில் ஆழ்த்தி தமது பக்கம் இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடனும், நம்பிக்கையுடனும், கேட்பதற்கு இனிப்பாக இருக்கும் **'சோஷியலிசம்'** பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அதிலே அவர்கள் எவ்வளவு நாணயத்தோடு உள்ளனர் என்பதும், அதனைச் செயல்படுத்த எந்த முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதும் ஒருபுறம் இருக்கட்டும்.

அதே சோஷியலிசத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் தகுதி, தமக்கன்றி மற்ற எந்தக் கட்சிக்கும் இல்லை என்று கூறும் உரிமை இவர்களுக்கு யார் அளித்தது? என்ன காரணம் காட்டி இவர்கள் அந்த உரிமை தமக்கே இருப்பதாகக் கூறுகிறார்கள்.

நம்முடைய பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்துகொள்கின்ற மக்கள் யார்? மேடையிலே அமர்ந்திருக்கிற கழக முன்னணியினர் எவரெவர்? மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் யார்? சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகிய இடங்களில் உறுப்பினராகியுள்ள கழகத் தோழர்கள் எப்படிப்பட்டவர்? மிட்டா மிராசுகளா! எட்டயாபுரம், போடி, ஜெமீன் வழிவந்தவர்களா! பெரும்பண்ணைக்குச் சொந்தக்காரர்களா! நம்மிடம் தீராதபகைகொண்டவனும் அவ்விதம் கூறிடமாட்டானே! காமராஜரே ஒரு முறை கழகத்தில் உள்ளவர்களைப் பிச்சைக்காரர்கள்! — என்றே கேலி பேசியிருக்கிறாரே.

இவர்களைக் கொண்டதும் இப்படிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வருவதுமான திராவிட முன்னேற்றக் கழகம் சோஷியலிசத்தைச் செயல்படுத்தாதா!

சோஷியலிசம் வேண்டும்! ஒப்புக்கொள்கிறோம்! வரவேற்கிறோம்! ஆனால் அதனைச் செயல்படுத்தும் திறமையும் உரிமையும், கழகம் போன்ற மற்றக் கட்சிகளுக்கு இல்லை, எமக்குத்தான் உண்டு என்று கூறிக்கொள்ள காங்கிரசுக்கு என்ன யோக்யதை இருக்கிறது.

சோஷியலிசத்தைச் செயல்படுத்திக் கொடுத்திடத் தக்கவர்களாலா காங்கிரஸ் நடத்தப்பட்டு வருகிறது? ஊருருக்கும் அந்தக் கட்சியிலே உள்ள மூலவர்கள் எப்படிப்பட்ட பெரிய புள்ளிகள் என்பது மக்களுக்குத் தெரியாதா! அப்படிப்பட்ட பெரிய புள்ளிகளின் ஆதிக்கம் காரணமாகத்தான், ஏழைகளின் தொகை பெருகியிருக்கிறது, அவர்களின் அல்லல்—வளர்ந்துவிட்டிருக்கிறது என்பதனை மக்கள் அறியமாட்டார்களா? அதே பேர் வழிகளின் பிடியிலே உள்ள காங்கிரசுக் கட்சியினால் எப்படி சோஷியலிசத்தைச் செயலாக்கிட முடியும்!—என்பதுபற்றியெல்லாம் மக்கள் எண்ணிப்பார்க்காமலா இருக்கிறார்கள்.

சோஷியலிசம் பேசும் காமராஜர் பவனி வருகிறபோதும் கொலுவீற்றிருக்கிற போதும்' சீமான்கள் பக்கம் நின்று பராக்குக் கூறுவதையும் மக்கள் பார்க்கத்தானே செய்கிறார்கள்.

கழகத்தை நடத்துகின்றவர்கள் வருகின்ற விழாக்களிலே, எந்தப் பெரிய புள்ளியும் கலந்து கொள்வதில்லை என்பதையும் மக்கள் தெரிந்து வைத்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்.

அப்படி இருக்கும்போது, சோஷியலிசத்தை எம்மால்தான் செயல்படுத்த முடியும் என்று காங்கிரஸ் கட்சி பேசுவதை எப்படி மக்களாலே நம்ப முடியும்!

பணக்காரர்கள் புடைசூழ பவனி வந்துகொண்டே, பணக்கார ஆதிக்கத்தை ஒழிக்கப்போகிறோம் பாரீர்! ஆதரவு தாரீர்!—என்று முழக்கம் எழுப்புகின்றனர் ஆளவந்தார்கள்; எதைச் சொன்னாலும் மக்கள் நம்பிக்கொள்கிறார்கள் என்ற நினைப்பில். ஆனால் மக்கள் அத்தனைத் தெளிவற்றவர்களாக இல்லை.

அவர்கள், காகிதப் பூவில் மணம் இருக்காது என்பதை அறியாதவர்கள் அல்லர்.

அதனை நன்கு அறிந்து கொண்டிருப்பதனால்தான் தம்பி! நம்மிடம் அத்தனைப் பற்றும் பாசமும் காட்டுகின்றனர்.

புதிய மயக்க மருந்து பலனளிக்கவில்லை என்பதைக் காங்கிரசாரே இப்போது மெள்ள மெள்ள உணர்ந்துகொண்டு வருகின்றனர். 'சுயராஜ்யம்'—என்று சொன்னபோது மக்களிடம் கிளம்பிய எழுச்சி இப்போது காணோமே என்று ஏக்கமடைந்து கொண்டு வருகின்றனர். திங்கள் தவறாமல் விழா நடத்துகிறார்கள், ஜனநாயக சோஷியலிச விழாவாம்!

அவ்விதமான ஒரு விழாவுக்கான அறிவிப்பு, கொட்டை எழுத்துக்களிலே மாயவரம் சுவற்றிலே—எழுதிவைக்கப்பட்டிருந்ததைக் காண நேரிட்டது; என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு துணிந்து போலி நாடகமாடிடும் சாமர்த்தியம் கொண்டவர்களாகக் காங்கிரசார் இருக்கிறார்களே என்பதை எண்ணி வியப்படையாமலும் இருக்க முடியவில்லை.

ஜனநாயக சோஷியலிச விழா; தம்பி! மாயவரத்தில், யார் தலைமை?

தலைமை வகித்தவர், சக்தி விலாஸ் பஸ் கம்பெனி முதலாளி பார்த்தசாரதி என்பவர்.

நான் முதலில், யாரோ வேண்டுமென்றே சக்தி விலாஸ்காரரைக் கேலி செய்ய, இதுபோல எழுதி இருக்கிறார்களோ என்று எண்ணிக் கொண்டேன்; நண்பர்கள் சொன்னார்கள், அவர்தான் தலைவர், அறிவிப்பு அதிகாரபூர்வமானதுதான் என்று.

இந்த போலி நாடகம் நடத்த தம்பி! மெத்த நெஞ்சுரம் வேண்டும்.

கேட்டுப்பாரேன், இது எப்படி ஐயா பொருந்துகிறது; விழா சோஷியலிசத்துக்காக! தலைமை வகிப்பவரோ, பெரிய பஸ் முதலாளி! சோஷியலிசம் வெற்றிபெற, அவரா வழி அறிந்து கூறுவார்!—என்று. ஒரு விளக்கம் வெடித்துக்கொண்டு கிளம்பும், எமது சோஷியலிசத்தில் முதலாளியும் உண்டு!—என்பதாக.

காங்கிரசார் கூறிடும் சோஷியலிசம் அப்படிப்பட்டது.

சைவ ஓட்டல்-கோழி பிரியாணி தயார்!-என்பது போன்றது.

சைவ ஓட்டல் என்கிறீர்களே கோழி பிரியாணி அங்கு இருக்கலாமா என்ருல், பதில் என்ன கூற முடியும்? கேட்டுப்பாருங்கள், காங்கிரஸ் பேச்சாளர்களை!

பைத்தியக்காரா! நாங்கள் நடத்தும் ஓட்டல் சைவ ஓட்டல். சந்தேகம் வேண்டாம்; உள்ளே வந்து பார் அவரைப் பொறியலும் கத்தரி கூட்டும் வெண்டைக் குழம்பும் இருப்பதை—என்பார்!

ஆனல் கோழி பிரியாணி தயார் என்று 'போர்டு' இருக்கிறதே என்று கேட்டால், திகைத்துப் போய்விடுவாரா என்கிறீர்களா? திகைக்கமாட்டார்கள்; துணிச்சல் மிக்கவர்கள்!!

ஆமாம்! கோழி பிரியாணியும் உண்டு! அதனல் என்ன! சைவ ஓட்டல் இது, ஆகவே சைவ பதார்த்தங்கள் உள்ளன. சைவ ஓட்டல் என்ருல், வெண்டையும் கத்திரியும், அவரையும் பிற காய்களும் உண்டு என்றுதானே பொருள்? இருக்கின்றன! சைவ ஓட்டல் என்று அறிவித்திருப்பதாலேயே, இங்கு இறைச்சி இல்லை என்ரு பொருள்! அப்படியா அறிவிப்புப் பலகை சொல்லுகிறது.

இங்கு ஆட்டு இறைச்சி, கோழிக்கறி
போன்றவை கிடைக்காது

என்ரு எழுதியிருக்கிரும். எமது ஓட்டல், சைவ ஓட்டல் — ஆனல் எமது சைவ ஓட்டலில் கோழிக்கறியும் இருக்கும்-என்று கூறிவிட்டு அடுத்த கூட்டத்திற்காக அவசரமாகக் கிளம்புவார். இடையிலே வேருர் காரணம் மனதிலே ததும்பும்; உடனே, திகைத்துப் போயுள்ள உன்னை இழுத்து நிறுத்தி, இன்னொரு காரணம் கூறுகிறேன், இது சைவ ஓட்டல் என்பதை உறுதிப்படுத்த, முதலாளி இருக்கிருரே, அவர் சுத்தச் சைவர், முட்டைகூடச் சாப்பிடமாட்டார், தெரியுமா! அவர் நடத்தும் கடையைச் சைவ ஓட்டல் என்று கூறுவது தவரு?-என்று கேட்டுவிட்டு-இன்று ஒரு போடு போட்டுவிட்டோம் என்ற திருப்தியுடன் நடையைக் கட்டுவார்!

தம்பி! கோழி பிரியாணி தயார்! என்ற அறிவிப்புடன், சைவ ஓட்டல் என்ற பலகையைத் தொங்கவிட்டு யாரும் கடை நடத்த இன்னும் துணியவில்லை.

காங்கிரஸ் கட்சியினரோ தனிப்பட்ட முதலாளிகளும் உண்டு எமது சோஷியலிசத்தில் என்று துணிச்சலுடன் கூறுகின்றனர்.

கோழி பிரியாணியும் வைத்துக்கொண்டு இந்த ஓட்டலுக்கு **சைவ ஓட்டல்** என்று பெயரிடலாமா என்று கேட்டதும், கடை நடத்தும் முதலாளி சுத்தச் சைவர் — முட்டை கூடச் சாப்பிடமாட்டார் என்று கூறும் துணிச்சல்காரரைப்போல, முதலாளிகளையும் வளர்த்துக்கொண்டு சோஷியலிசம் தழைக்கும் என்றும் பேசுவது பொருளற்றதாக இருக்கிறதே என்று கேட்பவர்களுக்கு, காமராஜரைக் காட்டுகிருர்கள்; பாருங்கள்! இவர் முதலாளி அல்ல! ஏழைபங்காளர்! —என்று.

ஆளுங் கட்சியில் இருக்கிரும் என்பதாலே தன்னுலே ஒரு துணிச்சல் வந்துவிடுகிறது. அந்தத் துணிச்சலுடன் பேசுகிருர்கள்; இடம் பேசுகிறது என்பதைப் புரிந்துகொண்ட மக்கள், இவர்களிடம் வாதாடுவானேன் என்று இருந்துவிடுகிருர்கள்; ஒப்புக்கொண்டு அல்ல; நமக்கு ஏன் வீண் வம்பு என்ற எண்ணத்தில்.

ஆனல் தம்பி! அந்தத் துணிச்சல் மிக்க பேச்சுப் பேசிடும் திறனும், பாராட்டத்தக்கதுதானே! எல்லோருக்கும் வருமா பொய்யையும் பொருளற்றதையும் மளமளவென்று பேசிட.

ஒரு எத்தன், தம்பி! அவன் அலுவலகத்திலே சிலகாலம் 'லீவ்' பெற எண்ணினன்; தனக்குக் கண் பார்வை சரியாக இல்லை என்று கூறினன்.

மருத்துவரிடம் அனுப்பினர்கள் பரிசோதனைக்கு.

டாக்டர், சுவற்றிலே அச்சடித்த எழுத்துக்கள் கொண்ட படத்தை மாட்டி, எழுத்துக்களைப் படி, ஐயா! என்ருர்.

எந்த எழுத்துக்களைப் படிக்கச் சொல்லுகிறீர் டாக்டர், என்று கேட்டான் எத்தன்.

எதிர்ப்புறம் உள்ள சுவற்றிலே தொங்கவிடப்பட்டிருக்கும் படத்தில் உள்ள எழுத்துக்களை என்று விளக்கமளித்தார் டாக்டர்.

அவன்தான் ஏமாற்றித் தீருவது என்று துணிந்து வந்திருக்கிருனே, சிக்கிக் கொள்வானு?

சுவரு? எதிரே இருப்பது சுவரு! — என்று கேட்டான் டாக்டர் ஏமாந்துபோனர். ஆசாமிக்கு எதிரே வெள்ளைச்சுவர் இருப்பதும், அதிலே படம் தொங்கவிடப்பட்டிருப்பதும் கூடத் தெரியவில்லை; பாவம் கண் அந்தஅளவுக்குப் பழுதாகிவிட்டிருக்கிறது என்று பரிதாபப்பட்டு, கண் மிகவும் கெட்டுவிட்டிருக்கிறது என்று எழுதிக்கொடுத்தார்.

ஒருமணிநேரம் ஓடிற்று. தன் நடிப்பால் டாக்டரை ஏய்த்துவிட்டவன், புதியபடம் ஒன்று கண்டுகளித்திட சினிமாக்கொட்டகை சென்று அமர்ந்தான்; படம் துவக்கப்படவில்லை; இசைவிருந்துமட்டும் நடைபெற்றுக்கொண்டிருந்தது; அந்த நேரத்தில் அவனைத்தூக்கி வாரிப்போடத்தக்க நிகழ்ச்சி நேரிட்டது. எந்த டாக்டரை, தனக்கு அடியோடு பார்வை கெட்டுவிட்டது என்று நம்பவைத்தானே, நடிப்பால், அதே டாக்டர், படம்பார்க்க, அதே கொட்டகைக்கு வந்து, பக்கத்திலேயே வந்து அமர்ந்தார்.

ஒருகணம் அவன் திடுக்கிட்டுப்போனுன், தன் குட்டு உடைபட்டுவிடுமே என்று எண்ணி; மறுகணம் சமாளித்துக்கொண்டு, தன்னைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்த டாக்டரின் பக்கம் திரும்பி "அம்மா! இந்த பஸ் புறப்பட இன்னும் எவ்வளவு நேரம்பிடிக்கும்" என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்.

கண் அடியோடு பழுதாகிப்போய்விட்டதால், சினிமாக்கொட்டகையை மோட்டார் பஸ் என்று தவருக எண்ணிக்கொண்டுவிட்டான் பாவம், என்று டாக்டர் எண்ணிக்கொள்ளுவார் என்று தந்திரம் செய்தான்.

டாக்டர் ஏமாந்து போனர்; பரிதாபம் கலந்த குரலிலே அவர் பேசினர், "யாரப்பா, உன்னை ஏமாற்றி இங்கே கொண்டுவந்து உட்கார வைத்துவிட்டார்கள்! இது மோடார் பஸ் அல்ல!! இது ஒரு சினிமா கொட்டகை! —வா! உன்னை நான் மோடார் பஸ் இருக்குமிடம் அழைத்துச் செல்கிறேன்; நான்தான் உன் கண்களைப் பரிசோதித்த டாக்டர்!" என்று.

"டாக்டர்! டாக்டர்! பார்த்தீர்களா டாக்டர்; உலகம் எவ்வளவு பொல்லாதது என்பதை. அப்பா! எனக்குக் கண் சரியாக இல்லை; மெள்ள என்னை மோடார் பஸ் இருக்குமிடம் அழைத்துக்கொண்டு போய்விடு" என்று கேட்டேன் ஒருவனை. அவன் "வா! ஐயா! உன்னை மோடார் பஸ்ஸிலேயே உட்கார வைத்துவிட்டு வருகிறேன்" என்று அன்பாகப் பேசி, இங்கு அழைத்துவந்து உட்காரவைத்துவிட்டுப் போய் விட்டான். நான் என்னடா இன்னும் பஸ் புறப்பட

கேள்வி--பதில்!

(1) பிரிட்டிஷ் பிரதமர் வில்சனுக்கு கட்சியிலேயே எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறதாமே, உண்மையா?

உண்மைதான். முன்பு விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு மெஜாரிடி இருந்தது. கட்சி எஃகுக்கோட்டையாக இருந்தால்தான் பதவியில் இருக்கமுடியும் என்ற நிலை இருந்தது. கட்டுப்பாடு இருந்தது. இப்போது பெரிய அளவு மெஜாரிடி. ஆகவே கட்சியின் உட்பூசல் பற்றித் தீவிரப்படுத்துகிறார்கள். ஆனாலும் வில்சன் நிலைமையைச் சரிப்படுத்திவிடக் கூடியவர். ஆகவே தொழிற் கட்சியின் மந்திரி சபை நீடித்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

(2) பக்ஷிகுலாம் முகமது மறுபடியும் தேசிய மாநாடு என்ற கட்சியைத் துவக்கி இருக்கிறாராமே, காமராஜர் புத்திமதி சொல்லி தடுத்திருக்கக்கூடாதா?

காமராஜரா! பாவம்! அவர் தன் கட்சியில் எத்தனைப் பேருக்குத்தான் புத்திமதி சொல்லிக் கொண்டிருக்க முடியும்! யார் அவர் புத்திமதியைக் கேட்கிறார்கள்? மூலைக்கு ஒருவராக அல்லவா முறைத்துக்கொண்டு நிற்கிறார்கள்!

(3) சேலம் இரும்பாலைத் திட்டம் என்ன ஆகும்?

பழங் கதையாய், கனவாய்ப் போய்விடும் போலத்தான் இருக்கிறது.

(4) போட்டிக் காங்கிரசுடன் இனி சமரசம் பேசப் போவதில்லை என்று கேரளக் காங்கிரஸ் கூறி விட்டதாமே, என்ன சொல்லுகிறீர்?

சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று நரி சொல்லிற்று என்று கதை இருக்கிறதே, தெரியுமல்லவா? அது நரிக் கதை! இது நாடாளும் கட்சியினர் ஏமாந்த கதை!! அவ்வளவுதான்.

(5) பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பஞ்சாயத்து தலைவர்கள் ஆகியோர் இரட்டை மாட்டு வண்டிகளில் பயணம் செய்வது நல்லது என்று முதலமைச்சர் பக்தவத்சலனார் கூறியிருக்கிறாரே, நல்ல யோசனை தானே!

ஆமாம்! நல்ல யோசனை. ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்களும் அதுபோல யோசனை கூறுவார்களே! மந்திரிகள் பல்லக்கிலும், பெரிய மந்திரிகள் ரதத்திலும் பயணம் செய்யலாம் என்ற யோசனையை!!

(6) நெல்லை நகராட்சியைக் காங்கிரஸ் அரசு கலைத்தது அடாத செயல் என்று வலது சாரி கம்யூனிஸ்டுகள் கண்டித்திருக்கிறார்களே, கவனித்தீர்களா?

கவனித்தேன். மகிழ்ச்சி. நன்றி!

(7) இந்தோனிஷியாவில் நடைபெற்றுக் கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கவனித்தால் எதிலே போய்முடியும் என்று தோன்றுகிறது?

டாக்டர் சுகர்னோ தமது நான்காவது மனைவியான ஜப்பானிய அணங்குடன் அந்த நாட்டுக்குச் சென்றுவிடக் கூடும் என்று பலர் வெளிப்படையாகவே பேசிக் கொள்ளும் விதமாக நடவடிக்கைகள் இருக்கின்றன.

(8) சென்ற பொதுத் தேர்தலின்போது கழக ஆய்வுக் குழு தொகுதி நிலைமைகளைக் கண்டறிய அனுப்பப்பட்டதுபோல இம்முறை உண்டா?

நிச்சயமாக உண்டு. அநேகமாக ஆய்வுக் குழு ஆகஸ்ட்டு திங்கள் மூன்றாவது வாரத்தில் தனது பணியினைத் தொடங்கக் கூடும் என்று தெரிகிறது.

(9) தஞ்சையில் மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தீர்மானித்தபடி, மாணவர் பிரசாரப் படை அமைத்துவிட்டார்களா?

பிரச்சாரப் படை இன்னும் அமைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் மாணவர் தலைவர்கள் பலர், இந்தி ஏகாதிபத்தியத்தைப் புகுத்தும் காங்கிரசை எதிர்த்துப் பிரச்சாரம் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

✽

வில்லையே; நேரம் ஆகிறதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்; நல்ல வேளை, நீங்கள் வந்தீர்கள்; மிக்க நன்றி!'' என்றான்; டாக்டர் உருகிப்போனார்.

இந்தக் கதையிலே வருகிறானே குருடனாக நடித்தவன், அவன் ஒரு மண்டலம் பாடம் கேட்கவேண்டும் தம்பி! காங்கிரஸ் பேச்சாளர்களிடம். அவ்வளவு துணிவுடன் போலி நாடகத்தைத் திறமையாக நடத்துகின்றனர்; முதலாளிகளையும் கொண்டுள்ளது எமது சோஷியலிசம் என்று பேசுகின்றனர்.

தம்பி! ஆட்சி நடத்தும் கட்சியிலே இருக்கிறோம் என்ற உடன் துணிச்சலும் அதற்குத் தேவைப்படும் திறமையும் தன்னாலே பொங்கி வழிகிறது; அதனால்தான் அவர்கள் முதலாளிகளும் கொலுவிருக்கும் சோஷியலிசம் எம்முடையது என்று பேசுகிறார்கள். அவர்களுக்கு வளர்ந்துவிட்டிருக்கிற துணிச்சலில், இனி அவர்கள்,

இனிக்கும் எட்டி
பாடும் ஊமை
ஓடும் நொண்டி
கருப்பு மல்லிகை

என்று பலப் பல பேசுவார்கள்! அவர்கள் அந்தத் துணிச்சல் கொண்டிருப்பதிலே நான் வியப்படையவில்லை; ஆனால் மக்கள் அந்தப் பேச்சையெல்லாம் நம்பிக்கொள்கிறார்கள் என்று எண்ணிக்கொள்கிறார்களே அது கண்டுதான் வியப்படைகிறேன். மக்கள் விவரமறியாதவர்கள் அல்ல; அவர்கள் நன்றாக அறிவார்கள், பேசுபவர் அறிவுத் தெளிவுடன் பேசவில்லை; அதிகார போதையிலே பேசுகிறார் என்பதனை. அந்தப் போதை தெளியட்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள்; போதையைத் தெளியவைக்கும் நாளையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்பன்,

அண்ணாதுரை

2—10

'போ வெளியே'

சாட்டையடியால் உடலெல்லாம் இரத்தம் கசிய அறிவொளியடிகள் தரையில் விழுந்திருந்தார், அவரது உடல் பிணம்போல் மண்ணில் கிடந்தது. புரண்டு படுக்கக் கூட அவருக்குச் சக்தியில்லை. மூச்சுவிடுவதும் சிரமமாக இருந்தது.

ஆனாலும் அவர் சுய நினைவோடுதான் இருந்தார். தம்மை அடித்தவனின் கன்னத்தில் அஞ்சலை ஆத்திரத்தோடு அறைந்ததையும், வேங்கையெனப் பாய்ந்தவளின் கையைவேறொரு முரடன் பிடித்திழுத்துக் குதிரை மீதேற்றிக் கொண்டு சென்றதையும் — அவர் பார்த்துக்கொண்டுதான் இருந்தார். அந்த அக்கிரமத்தைக்கண்டு அவரது மனம் எரிமலையாயிற்று. எழுந்திருக்கவோ, பேசவோ சக்தியற்ற நிலையில் உடலிருக்க உள்ளம் மட்டும் எரிமலையாகி என்ன பயன்?

முரடன் கையில் சிக்கி அஞ்சலை தவித்ததையும் பலாத்காரமாக அவளைக் குதிரை மீது இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் சென்று விட்டதையும் நினைக்க அவரது கண்கள் நீரின் ஊற்றாயின.

முரடர்கள் மூவரும் சென்று விட்ட பிறகு, 'அஞ்சலை! அஞ்சலை! என்று முனு முனுத்தபடித் தம் கண்களை மூடிக்கொண்டார்.

ஏதோ அகண்ட ஆழியில் விழுந்து, பெரிய முதலையின் திறந்த வாயினுள் சென்று கொண்டிருப்பதைப்போல அவருக்குத் தோன்றியது, அவமானமும் வருத்தமும் அவரது எலும்புகளை அரித்துத் தின்னத் தொடங்கின.

'ஆ! அப்பா!' என்று யாரோ முக்கி முனங்குவதைக் கேட்டதும் அவர் கண்களைத் திறக்காமலேயே காதுகளைக் கூர்மையாக்கினார். அது யாருடைய குரல் என்பதை அவரால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

சப்தம் வந்த திக்கில் சிரமத்தோடு முகத்தைத் திருப்பிமெள்ள கண்களைத் திறந்தார். வண்டியின் சக்கரத்தில் அடித்துக் கட்டப்பட்டிருந்த வண்டிக்காரனின் முனகல் அது.

'ஐயா!'

வண்டிக்காரன் ஈனக்குரலில் அழைத்தான்.

'என்னப்பா?' என்று அடிகள் கேட்டார், உடலைக் கொஞ்சம் திருப்பி.

'அஞ்சலையை அவர்கள் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்!'

அவனது குரலில் சோகம் நிறைந்திருந்தது.

'அந்தக் கொடுமையைப்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன், பிணத்திற்கு சமானமாக! அய்யோ பாவம், அந்தச்சண்டாளர்கள் உன்னையும் பலமாக அடித்துவிட்டார்கள் போலிருக்கிறதே!'

'என்னை அடித்தாலும் பரவாயில்லை — சாகடித்தாலும் நஷ்டமில்லை—படுபாவிகள் தங்களையும் அல்லவா அடித்துவிட்டார்கள்!' என்று அவன் தேம்பிக்கொண்டே கூறி ஆத்திரத்தோடு உடலை அப்படியும் இப்படியும் திருப்பினான். கட்டுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து கொடுத்தன. உடல் முழுவதும் சுற்றியிருந்த கயிற்றை மிகுந்த சிரமத்தோடு அவிழ்த்துக் கொண்டு, அவன் அடிகளின் அருகே வந்தான்.

'இந்த அக்கிரமத்தைப் பூமி தாங்குகிறதே! என்று கண்கலங்கக் கூறிக்கொண்டே, தான் கட்டியிருந்த துணியில் கொஞ்சம் கிழித்து, அடிகளின் உடலில் கசிந்த இரத்தத்தைத் துடைத்தான். மெல்லத் தூக்கி அவரை உட்கார வைத்தான்.

அன்பு ததும்பும் கண்களால் அவனைப் பார்த்து அடிகள் பெருமூச்சுவிட்டார்.

அந்தச் சமயத்தில், தூரத்தில் குதிரை வரும் சப்தம் கேட்கவே, வண்டிக்காரன் எழுந்து நின்று அத்திசையில் பார்த்தான்.

அவர்களுக்கும் பக்கமாக அக் குதிரை வருகிறதென்பதை அறிந்ததும் 'ஐயா! திரும்பவும் திருடர்கள் வருகிறார்கள் போலிருக்கிறதே!' என்று விழி மிரள கூறினான்.

“வரட்டுமே எதற்காக நாம் பயப்படவேண்டும்?”

“புலி வருகிறது நாமிருக்கும் இடத்தை நோக்கி என்பதை அறிந்த பிறகும், அதன் பார்வையில் படாமல் தப்ப வேண்டாமா? இதோ பக்கத்திலிருக்கும் இந்தப் புதருக்குள் போய் ஒளிந்துகொள்ளலாம்! தங்களால் நடக்க முடியாது — நான் தூக்கிக்கொள்கிறேன்!” என்று சொல்லிவிட்டு அவன் குனிந்தான்.

“வேண்டாமப்பா, வேண்டாம்! நாம் இங்கேயே இருக்கலாம்! அஞ்சலையைத்தான் இழந்தோம் — இன்னும் என்ன இருக்கிறது இழக்க, உயிரைத் தவிர! உயிர் மட்டுமென்ன இந்த உடலுக்குச் சொந்தமானதா? என்றைக்காகிலும் ஒரு நாள் பறந்து போக வேண்டியது தானே? உனக்குப் பயமாக இருந்தால், நீ வேண்டுமானால் போய் மறைந்து கொள்!” என்று அடிகள் பக்கத்திலிருந்த மருத மரத்தில் சாய்ந்து உட்கார்ந்தார்.

குளம்படிச் சப்தம் அருகே கேட்டது. குதிரை மீது வருபவனின் முகம் நன்றாகத் தெரிந்தது. அவன் அந்த முரடர்களில் ஒருவன் அல்லன் என்பதை வண்டிக்காரன் தெரிந்துகொண்டு அந்தச் செய்தியை அடிகளிடம் கூற பார்வையை அவர் பக்கம் திருப்பினான்.

“நீ பயந்தாயே வருவது அந்த முரடர்களோ என்று! அல்ல! நமக்கு மிகவும் வேண்டியவன் வரு

கிருன்!'' என்று அடிகள் கூறியதைக் கேட்டதும் வண்டிக்காரன் ஆச்சரியத்தோடு குதிரைமீது வருபவனை உற்றுப் பார்த்தான்.

குதிரை அவர்கள் அருகே வந்து நின்றது. 'அடிகளே! இதென்ன உடலெல்லாம் இரத்தம்?'' என்று பதைபதைப்போடு கேட்டுக்கொண்டே, குதிரையை விட்டுக் கீழே குதித்தான் மாரிமுத்து.

"மாரிமுத்து, எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்துவிட்டது! யாரோ கள்வர்கள் வழி மறித்து, எங்களையும் அடித்து, அஞ்சலையையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்!'' என்று தரையில் காய்ந்து விழுந்திருந்த ஒரு சருகைப் பார்த்துக்கொண்டே, அவர் கூறினர்.

"என்ன? அஞ்சலையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்களா?'' என்று அதிர்ச்சியோடு மாரிமுத்து கேட்டான்.

"ஆமாம் மாரிமுத்து, ஆமாம்! என்று குனிந்த தலையை நிமிராமலேயே, உதறும் குரலில் அவர் கூறினர்.

"அவர்கள் கள்வர்களாக இருக்க மாட்டார்கள்—யாரோ திட்டமிட்டுச் செய்த வேலையாகத்தான் இது இருக்கவேண்டும்! இல்லாவிட்டால், அஞ்சலையை எதற்காகத் தூக்கிக்கொண்டு போகவேண்டும்!''

"ஆமாம் மாரிமுத்து, நானும் அப்படித்தான் சந்தேகப்படுகிறேன்! எனனிடமிருந்தால் பத்திரமாக இருப்பாள் என்ற நம்பிக்கையினுல்தானே, சோலையப்பன் அவளைப் புத்த விகாரத்தில் கொண்டு வந்துவிட்டான்! சோலையப்பன் வந்து கேட்டால், இப்பொழுது என்ன பதில் சொல்வேன்?'' என்று வேதனையோடு கூறி, காய்ந்திருந்த தொண்டையை நனைக்க அவர் உமிழ்நீரைக் கூட்டினர்.

"சோலையப்பன்!'' என்று பெருமூச்சு விட்டுக் கூறி, மாரிமுத்து பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

"என்ன செய்தி மாரிமுத்து? சோலையப்பனுக்கு ஏதாகிலும்...?'' என்று வாக்கியத்தை அரைகுறையாக நிறுத்திவிட்டு, அவனது முகத்தை அடிகள் இமை கொட்டாமல் பார்த்தார்.

"அந்தச் சோக நிகழ்ச்சியைக் கூற, ஒரு வாரத்திற்கு முன்பு தங்களைத் தேடிவந்தேன்! புத்தபுரத்திற்குத் தாங்களும் அஞ்சலையும் சென்றிருப்பதாக அங்கே கூறினர்கள்! தூமகேது ஊரில் இல்லை—ஆகவே தங்களைப் பார்த்துவிட்டுப்போகலாம் என்று வந்தேன்!...''

"அந்த விவரங்களைப் பிறகு கூறக்கூடாதா? முதலில் சோலையப்பனுக்கு என்னவென்று சொல், மாரிமுத்து!''

"தூமகேதுவிடம் அவன் சிக்கி விட்டான்!''

"அப்படியா?''

"ஆமாம், அடிகளே! இப்பொழுது சோலையப்பன் சிறையில் இருக்கிருன்! அவன் செய்த குற்றத்தை நிரூபித்து, அவனுக்கு மரண தண்டனை தரவேண்டுமென்று அந்த வஞ்சகன் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிருன்! அதற்குவேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் கச்சிதமாக முடித்து வைத்திருக்கிருன்! மதுரைக்கு மன்னன் குலசேகரன் வரவேண்டியதுதான் பாக்கி! செந்தாமரை என்ெருரு நடனமாது இருக்கிருள். மதுரையில், அவளோ தூமகேதுவின் கையாள்! அவளது பளிங்கு மேனிக்கு ஆசைப்பட்டு, பகுத்தறிவை இழந்துவிட்டான், சோலையப்பன்! பேய்க்கரும்பை, செங்கரும்பு என்று நம்பிவிட்டான்! எட்டிககனியின் நிறத்தில் மயங்கி, கனிகளில் இது சிறந்தது, கற்கண்டிலும் இனியது என்று தீர்மானித்துவிட்டான்! ஆகையால், தனது அந்தரங்கங்களை எல்லாம், அந்த ஆடும்பாம்பின் எதிரே கொட்டிவிட்டான்!''

"சோலையப்பன் வாலிபன், அழகிற்கு மிகவும் எளிதில் அடிமையாகிவிடுவான் என்றறிந்துதானே—தூமகேதுவின் ஒற்றர் குழுவில் அழகிய பெண்கள் இருக்கிருர்கள் என்று எச்சரிக்கை செய்து அனுப்பினேன்!''

"தங்களது எச்சரிக்கையை மட்டுமா, இந்தத் தரணியையே மறந்துவிட்டான்—அந்த உள்ளம் உருக்கியின் உதட்டுச் சிரிப்பைக் கண்டு! குடும்பப்புகழ், கொண்டகொள்கை, எடுத்த வேலை, செய்த சபதம்—சகலவற்றையும் அந்தச் சாகசக்காரியின் கண்வெட்டிற்குக் காணிக்கையாக்கிவிட்டான்! பொன்னையாவின் ஓலையிருந்த பசுமலைக் குகையைக் கண்டு பிடித்ததையும், அங்கே உள்ள ஓலைகளைப் பற்றியும், கொஞ்சும் நேரத்தில் அவளிடம் உதிர்த்து விட்டான்!''

"சோலையப்பனே சிறையில் இருக்கிருன்—அஞ்சலையையோ யாரோ சதி செய்து அபகரித்துக் கொண்டுபோய்விட்டார்கள்! ஆபத்தில் சிக்கிய அவர்களைக் காப்பாற்ற முடியுமா, நம்மால்?'' என்று கேட்டுக்கொண்டே மருதமரத்தைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்க அடிகள் முயற்சி செய்தார். அவரது கால்கள் நிலை கொள்ளாமல் ஆடின. நிற்கமுடியாமல் விழப்போனவரை, மாரிமுத்து சேர்த்துப் பிடித்துக் கொண்டான்.

'போகலாமே அப்பா!' என்று அடிகள் தன்னைப்பார்த்துக் கூறியதும், வண்டிக்காரன் ஓடிச் சென்று மாடுகளை இழுத்து வண்டியில் பூட்டினன்.

அடிகளும் மாரிமுத்துவும் ஏறி உட்கார்ந்தார்கள். குதிரை பின்னல் வர, வண்டி வேகமாகச் சென்றது.

"ஏதோ முக்கியமான செய்தியாகச் சோழனைச் சந்தித்துப்பேச, தூமகேது சென்றிருக்கிருன். அவன் மதுரைக்குத் திரும்ப இன்னும் ஒருவாரத்திற்கு மேலாகும்! அதற்குள் சோலையப்பனை எப்படியாவது சிறையினின்றும் மீட்டுவிடவேண்டும்!'

'அதென்ன அவ்வளவு சுலபமான காரியமா, மாரிமுத்து?'

'சுலபமானதல்ல, சிரமமானதுதான்! ஆனுலும் அதை நம்மால் செய்ய முடியும்!'

'எப்படி?!

தாங்கள் சரியென்ருல்போதும் சோலையப்பனுக்கு விடுதலை கிடைத்துவிடும்!'

'விளக்கமாகச் சொல் மாரிமுத்து!' எனறதும் மாரிமுத்து சொல்லத் தொடங்கினன்.

(வளரும்.)

வருந்துகிருேம்

வழக்கறிஞர் தில்லை வில்லாளன் அவர்களின் அருமைத் தாயார் மறைவெய்திய செய்தி கேட்டு மிக்கத் துயருற்ருேம்.

அன்னையாரைப்பிரிந்து துயருறும் நண்பர் வில்லாளன் அவர்கட்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த பரிவும ஆறுதலும் உரித்தாகுக.

2-ம் பக்கத் தொடர்ச்சி

தற்கொலை செய்துகொள்ளக் கூடாது. தென்னரசு எவ்வளவு கம்பீரமா பேசினரு! நீ இப்படி வார்த்தைங்களை மென்னு குதப்புறியே!'' என்முன் முத்துசாமி.

''டேய் முத்துசாமி!'' என்று எறிந்து விழுந்துவிட்டு சரி! சரி! அவரு சொன்ன கருத்தை மட்டும் சொல்றேன் கேட்டுக்க, என்று கூறி, "ஒரு கட்சியிலே இருக்கிற தலைவனுடைய கருத்து, கட்சியிலே இருக்கிற மத்தவங்களாலே கவனிக்கப்படாதது மட்டுமில்லே; தூக்கி எறியப்படவே செய்யுதுன்னு. என்ன அர்த்தம்! ஒண்ணு இந்திரா காந்தியை, காமராஜ் பதவியை விட்டுக் கீழே இறக்கணும்; இல்லேன்னு காமராஜ் இருக்கிற இடத்தைவிட்டுட்டு ஓடியாந்திடணும்ன்னு'' சொன்னரு. இரண்டையும் செய்ய முடியலேன்னு, 'மானத்தோடு வாழ்வோம்!'' இசைத்தட்டு என்னு, எதுத்ததெரு எட்டப்பன்மாதிரிதான்! மானங்கெட்ட நிலைமை!—என்று நிறுத்தினன்!

சீதாபதி ஏதோ பேச வாய் திறந்தார். வேலப்பன் குறுக்கிட்டு 'மன்னர்குடி நாராயணசாமி பேசறப்போ, கொஞ்சம் மாவட்ட 'வாடை' அடிக்கலே' என்முன்.

''டேய் குறுக்குமூளை! ஒரு உதாரணத்துக்குதான், மில்லும், மில்லுக்கு நெல்லும், நெல்லுக்கு உழவனுங்கிறதைப்பத்தி அக்குவேறு, ஆணிவேரு புட்டுப் புட்டுக் காட்டினரு. உதாரணத்துக்கு தஞ்சாவூர் ஜில்லாவைப்பத்தி எடுத்துக் காட்டுனரு! அவரு தஞ்சாவூர் ஜில்லா. கண்ணுலே பட்டதை எடுத்துச் சொன்னரு — என்முர் சீதாபதி சற்றுக் கோபமாக!

''கோபப்படாதே தம்பி! வெங்கட்ராமனைப்பத்தி அவரு என்னமோ சொன்னரே. அது என்னு. சரியா கவனிக்கலே நான்'' — என்முன் சாத்தப்பன்.

''நீ ஏன் கவனிக்கப்போறே! எங்கெ வந்திருக்கோம்! எதுக்கு வந்திருக்கோம்! அப்படிங்கிறதிலே அக்கறை இருக்கோணும்—என்முர் சீதாபதி.

''இனிமே அப்படியெல்லாம் அலட்சியமா நடந்துக்கமாட்டேன்! நீ சொல்லு தம்பி!'' — என்முன் சாத்தப்பன்.

''தஞ்சாவூர் ஜில்லாவிலே இருக்கிற சில பெரிய பெரிய பண்ணையாருங்களுக்காக அணைக்கட்டிலே நீர்மட்டம் குறைவாஇருக்குதுன்னு தெரிஞ்சும், 40-அடிதான் இருக்கு; இப்ப தண்ணி தெறந்துவிட்டா, பின்னலே, ஏழை விவசாயிங்க பாதிக்கப்படுவாங்கன்னு புரிஞ்சும், தண்ணி தெறிந்துவிட்டதுனலே தான், போனவருஷம், சரியான விளைச்சல் இல்லாமெப் போச்சுன்னும், சரியான அளவு தண்ணி இருப்பு இருக்கிறப்போ தெறந்து விட்டிருந்தா, தஞ்சாவூர் மாவட்டம் மட்டும், அது கண்டு முதல் பண்ற அளவு, இன்னும் 6-மாசத்துக்கு தமிழ் நாட்டுக்கேப்போதும்! அப்படியிருந்தும் சோத்துப் பஞ்சமும், அரிசிப் பஞ்சமும் வந்திருக்கிறதுக்கு என்னென்னமோ காரணங்களைச் சொல்றுங்க; நான் சொல்றேன், இந்தத் தட்டுப்பாட்டுக்கு வெங்கட்ராமன்தான் காரணம்ன்னு சொன்னரே! மானம், ரோஷம் இருந்தா, இந்தமாதிரி கொடுமை செய்யறவுங்க தலையில முக்காட்டைப்போட்டுக்கிட்டு, எங்கேயாவது மூலையிலெல்லபோயி முடங்கிக் கிடக்கணும்'' என்று சொன்னர் சீதாபதி.

''அதுசரி! கோட்டைத் திடல்லே ஏன் கூடியிருக்கோம்னு நாவலர் சொன்னரே! எனக்குப் புரியலே! கொஞ்சம் விளக்கிச் சொல்லேன்!'' என்முன் சாத்தப்பன்.

''ஆமாமாம்! முக்கியமான பேச்சு அது. இந்தக் கோட்டைத்திடல்லே கோட்டைக்கு உள்ளே இருந்த அந்தக் காலத்து வீரர்கள் எல்லாம், வந்து போர்ப்பயிற்சி பெறுவாங்க; இப்பவும் நாம் பயிற்சிபெறத்தான் இந்தத் திடல்லே கூடி இருக்கோம்; நாம் பெறவேண்டிய பயிற்சி 'காங்கிரஸ்ஆட்சி'ங்கிற எதிரியைத்தாக்கி வீழ்த்துறதுக்கு நாம என்னென்ன செய்யனும், எப்படியெப்படி நடந்துக்கணும்ங்கறதுதான், பெற்ற பயிற்சியை ஒழுங்கா திடமாநம்பிக்கையோடசெயல்படுத்தின, எதிரி எழுந்திரிக்கவேமாட்டான்''னரு. இதிலே புரியாதது என்ன இருக்கு?'' என்று கேட்டார் சீதாபதி.

''தம்பி! அப்போ நான் 'பீடா' கடைக்குப் போயிட்டேன்!'' என்முன் சாத்தப்பன்.

''பீடா கடையையும், பீடிக்கடையையும் நெனைச்சிக்கிட்டே இருந்தா ஒழுங்கான பயிற்சிஎப்படிக்கிடைக்கும்; எதிரியை எப்படி வீழ்த்தப் போறே?'' — கிண்டலாகக் கேட்டுவிட்டு முத்துசாமியைத் திரும்பிப் பார்த்தார்!

''நெசமா! நான் எங்கேயும் போகலே! நாவலர், 'காங்கிரஸ் சேர்த்து வச்சிருக்கிற பணம், குவிச்சுவைச்சிருக்கிற அதிகாரம் இதையெல்லாம் 1967-ல் எதிர்க்கணும்னு, நாம் எவ்வளவு விழிப்புணர்ச்சியோடு இருக்கோமோ, அவ்வளவுக்கு நமக்கு வெற்றிநிச்சயம்ன்னு சொன்னதை நான் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன்!''—என்முன் முத்துசாமி

''சீதாபதி தம்பி! நீ கிண்டல்காரத் தம்பின்னு எங்களுக்குத் தெரியாதா! நீ என்ன சொல்றேன்னு கேட்கத்தான் நான் அங்கே போயிருந்தேன், இங்கே போயிருந்தேன்னு எல்லாம் பொய் சொன்னேம்! தலைவருங்க பேசின பேச்சை, பச்சை மரத்திலே ஆணி அடிச்சாப்போல நி எடுத்துக் காட்டுறப்போ எங்களுக்கு ஒரு தனி சந்தோஷம்! அதனலேதான், உன் வாயைக் கிண்டுறேம்! நீ என்னடான்னு ஒரே யடியா கோபிச்சுக்கிறே!''—என்முன் சாத்தப்பன்!

சீதாபதி சிரித்துக் கொண்டே, நான் என்னத்தைச் சொல்லிடப் போறேன்; நீங்களும்தானே கேட்டுக்கிட்டிருந்தீங்க என்முன்.

'' இருந்தாலும்''....இழுத்துக் கொண்டே இருந்தான் வேலப்பன்.

''நிறுத்து நிறுத்து! நானே சொல்றேன்; கந்தப்பன் எம். பி. பேசுறப்போ, சர்க்கார் கொடுத்த ஒரு புள்ளி விவரத்தை வச்சுக்கிட்டு, இந்த சர்க்கார் எவ்வளவு திறமையில்லாம இந்த 19 வருஷ காலமா இருந்திருக்குன்னு கேட்டாரே, கவனிச்சியா!

''கவனிச்சேன்! புள்ளிவிவரம்ல்லே. எனக்குப் புரியலே!''

''புள்ளிவிவரம் எல்லாருக்கும் புரிஞ்சிடாதுன்னுதான் சர்க்கார், எதைக் கேட்டாலும் புள்ளிவிவரத்திலேயே பதில் சொல்லுது. கந்தப்பன் சொன்னரு: 480-மிலியன் ஏகர் சாகுபடிக்கு லாயக்கான நிலம் இருக்கு ; இதிலே 328 மிலியன் ஏகர் நிலத்துக்கு தண்ணி வசதி கொடுக்க வாய்ப்பு வசதி இருந்தும் 187-மிலியன் ஏகராவுக்குதான் வசதிசெய்து கொடுத்திருக்காங்க; இதிலேயும் 93-மிலியன் ஏகரா நிலத்துக்குதான் தண்ணி பாயுது! இதிலேயும் பாதிக்குமேலே வெள்ளைக்காரனே வசதி செஞ்சது''ன்னரு.''

"ஓகோகோ! இருக்கிற வசதிங்களைக்கூட இவுங்க ஒழுங்கா, திறமையா பயன்படுத்திக்கலேன்னு சொல்லி இருக்காரு இல்லியா!"

"ஆமாம்! நம்ம மதியழகன் என்ன சொன்னாரு?" — என்றான் மாநாட்டுக்கு வராத நீலகண்டம்! விழித்த விழிகளை விரித்தபடியே வைத்துக் கொண்டு!

"ஜாதிக்கொரு கட்சி வச்சிக்கிட்டிருக்கிறதினாலேயும், ஜாதிக்கொரு பதவியோ, மந்திரி வேலையோ கொடுத்திடுறதினாலேயும், நம்ம நம்ம பிரச்னைங்க தீர்ந்துடாது; சமுதாயம் முன்னேறி விடாது; காங்கிரஸ் கொடுமையை எல்லாரும் ஒண்ணா சேர்ந்து முறியடிக்கணும்னு சொன்னாரு!"
—என்றான் சீதாபதி.

"நான் ஒரு புத்தி கெட்டவன்! அவுங்க அவுங்க அதைப் பேசினாங்க, இதைப் பேசினாங்கன்னு நீங்கள்லாம் பேசிக்கிறப்போ எனக்கு எப்படி இருக்கு தெரியுமா?
—என்றான் நீலகண்டம்!

"மாநாடுன்னா, சாதாரண பொதுக்கூட்டம்மாதிரியில்லேன்னு எவ்வளவு சொன்னேன்! 'எல்லாம் பேச்சுதானே'ன்னு நீ சொன்னியே! இப்ப ஏன் 'ஐயோ வரல்லியே'ன்னு அங்கலாய்ச்சிக்கிறே!"

சீதாபதி கேட்டார் இப்படி!

சரிசரி! சிவகங்கை மாநாட்டுக்குக் கண்டிப்பா வந்துடுறேன். அப்புறமா என். வி. என். என்ன சொன்னாரு?"

"கந்தப்பண்ணே! நீ கொஞ்சம் சொல்லு! நான் கேட்கிறேன்'
—என்றார் சீதாபதி.

"ஏன் நீங்க அப்ப எங்கே போயிட்டிங்களாம்!" சிரித்துக் கொண்டே கேட்டான் கந்தப்பன்.

"எங்கேயும் போகலே! போகவும் மாட்டேன். மாநாட்டிலேன்னு இல்லே...எந்தவொரு நிகழ்ச்சியாயிருந்தாலும், அந்த நிகழ்ச்சியை, நம்ம ஜனங்ககிட்டெ எடுத்துச் சொல்லுற பயிற்சியை நாம எல்லாரும் எடுத்துக்கணுமே! அதுக்குதான் உன்னை சொல்லச் சொல்றேன்! சொல்லு சொல்லு!" —
என்றார் சீதாபதி.

"நீலகண்டம்! 1962-லே நாம எலெக்ஷன்லே என்னை சொன்னோம். 5 ஏகர் நிலம் — வயிறுற உணவு — இருக்க இடம் எல்லாம் கெடைக்க ஏற்பாடு செய்வோம்னு சொன்னோமே! செய்ய முடியலியே! ஏன்?"

"நாமதான் சர்க்கார் அமைக்கலியே! எப்படிக் கொடுக்க முடியுமாம்?"

"அதனாலேதான், இந்தக் காங்கிரஸ் ஆட்சியிலே, வந்த விருந்தாளிகளை நாலு நாளைக்கு வச்சியிருந்து, உபசரிச்சி அனுப்ப முடியாத நெலைமையும், அடுத்து மூணு மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், ஏழேகாலுக்கு ஜனதா, ஒன்பதே முக்காலுக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ். எதுக்கு டிக்கெட் வாங்கிக்கிட்டு வரன்னு வந்தன்னிக்கே கேட்டு விருந்தாளியை விரட்டுற நிலைமைக்கு வந்துட்டோமே, அந்தக் கொடுமையைப் போக்கவும், நம்ம திட்டத்தைச் செயல்படுத்தவும், நாம சர்க்கார் அமைக்கணும்; சர்க்கார் அமைக்க (எல்லாரையும் சுட்டிக்காட்டி) நீங்கல்லாம் நல்லபடியா வேலை செய்யணும்னார்."

"சரி! கர்னாடக மாநிலத்திலேயிருந்து வந்த பதி என்ன சொன்னாரு சொல்லு!—என்றார்.

"நான் சொல்லட்டுமா? என்று தொடர்ந்தார், சாத்தப்பன்;

பதி சொன்னாரு: 1949லே சின்னக் குழந்தையா இருந்த தி. மு. க. 1967லே 18 வயசு இளைஞனா வளர்ந்தாச்சு. இனிமே 'காங்கிரஸ்' மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு இடம் இல்லே; அனுமதிக்கமாட்டோம்னாரு! கர்னாடகத்திலேகூட பெங்களூரிலே முதன்முதலா போன வருஷம் எதிர்கட்சிங்க கார்ப்பரேஷனைக் கைப்பற்றிவிட்டது; அடுத்தும் கைப்பற்றும்ன்னு சொன்னாரு!"

"சரி முத்துசாமி! உனக்குத்தான் தெலுங்கு தெரியுமே, ஆந்திராவிலிருந்து வந்த வீராசாமி என்ன சொன்னாரு?"

"ஆந்திர மாநிலத்தில்கூட 3 இடத்தில் தி. மு. க. பஞ்சாயத்துகளைக் கைப்பற்றி இருக்கிறதா சொன்னாரு."

'கரெட்!' வீடு உச்ச வரம்பு பற்றி யார் பேசினா சொல்லு கந்தப்பண்ணே!

"சீதாபதி தம்பி! இதென்ன பரீட்சையா?

"நிச்சயமா பரீட்சைதான் — உன் கவனத்துக்கு!"

"சேலம் ராஜாராம் எம். பி. பேசினாரு."

"என்ன பேசினாருன்னு சொல்லுப்பா வேலப்பா!

"மாட்டேன்னு நெனைச்சுக்கிட்டியா! மைசூரைச் சேர்ந்த காங்கிரஸ் எம். பி. சக்ரவர்த்திங்கிறவரு, கர்னாடக மாநில காங்கிரசிலே வீடுகளுக்கு உச்ச வரம்பு வேணும்னு ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேத்துனாரு. அதேபோல ஒரு தீர்மானத்தை அ. இ. கா. க.விலேயும் நிறைவேத்தணும்னு காமராசர் கிட்டே சொன்னாராம்! அ. இ. கா. க. உறுப்பினர்களிலெ பல பேரு அந்த தீர்மானத்தை எதுத்து, தீர்மானமே வராமே செய்துட்டாங்களாம். அவுங்க தீர்மானம் கொண்டு வந்து, அதைப் பார்லிமெண்டிலே சட்டமா செய்யிறதுக்கு சிபார்சு செய்யணுமாம் எப்படி நடக்கும்? காங்கிரஸ்காரங்களே எதுக்கிறப்போ! காமராஜர்கூட, இதை ஆராய ஒரு கமிட்டி அமைச்சிருக்கேன்'னுட்டு எழுந்து போயிட்டாராம்!

"எஸ். எஸ். ஆர். என்ன சொன்னாரு சொல்லு?"

"சொல்லமாட்டேன்னு நெனைச்சிக்கிட்டியா காமராஜ் கேட்டாராம்! வெள்ளைக்காரன் காலத்திலே எவனாவது சோறு கொடுன்னு கேட்க முடியுமா? அந்த உரிமையைக் கொடுத்ததே காங்கிரஸ் தானே, அதுக்கிட்டே நன்றிகாட்ட வேண்டாமான்னு! பத்திரிகையிலே வந்ததைதான் சொன்னாரு! இருந்தாலும், அதை எஸ். எஸ். ஆர். சொல்றப்போ, ஒரு மெருகு இருந்துது!

என்கிறபோது நீலகண்டம் குறுக்கிட்டு, "ஆமா! இந்த மாதிரி இந்திராகாந்திகூட ரஷ்யாவிலே கருப்புக்கொடி காட்ட முடியுமா? அந்த உரிமையை நாங்கதானே குடுத்தோம்'ன்னு பேசுனாங்கல்லே!" —
என்றார்.

"ஆமாமா! அங்கே முடியுமா? இங்கே முடியுமா? அது முடியுமா? இது முடியுமா?ன்னு கேட்டுக் கேட்டு இப்பப் புது பாணியைக் கடைப்பிடிக்கத் தொடங்கிட்டாப் போல இருக்கு."

என்கிறபோது முத்துசாமியின் மனைவி முனியம்மா, மூணாம் வீட்டு முத்தம்மா, அவள் சகோதரி சக்கு ஆகியோர் அந்தப் பக்கம் வருகிறார்கள். முனியம்மாவைப் பார்த்த முத்துசாமி அவளை அழைக்க, அனைவரும் வந்து அங்கு அமர்கின்றனர்.

சீதாபதி முனியம்மாளுக்கும் மற்றவர்களுக்கும் வணக்கம் செய்தார்.

"என்ன தங்கச்சி! மாநாடு எப்படி இருந்துது!''

"நீங்களும்தானே வந்திருந்திங்க. என்னைக் கேட்குறிங்களே''? — என்றாள் முனியம்மாள்.

"நான் இங்கே ஒரு பரீட்சை நடத்திக்கிட்டிருக்கேன். அதனால ......''

முத்துசாமி குறுக்கிட்டு முனியம்மாளைப் பார்த்து—

"மாநாட்டுக்கு வந்திருந்தவங்க எல்லாம் எப்படி எப்படி இருந்தாங்கங்கிறதுக்கு இப்படி ஒரு பரீட்சை. சொல்லு முனியம்மா...''—என்றார்.

"நானும் அவருகூட எத்தனையோ மாநாட்டுக்குப் போயிருந்தேன். பொம்பளைங்க கூட்டத்தை இந்த மாநாட்டில பார்த்த மாதிரி, வேறெங்கேயும் பார்க்கலே; இல்லே முத்தம்மா!''

"ஆமாம்! எனக்குப் பக்கத்திலே, சர்க்கார் துப்பாக்கிச் சூட்டிலே செத்துப்போன மகனைப் பறி கொடுத்த ஒரு குடும்பம் உட்கார்ந்துக்கிட்டிருந்தது. சர்க்கார் கொடுமையை தலைவருங்க விளக்கிக்கிட்டிருந்தப்போ அவுங்க கண்ணுல பொலபொலன்னு தண்ணி வந்துட்டுது. என்னா ஏதுன்னு கேட்டேன். விவரத்தைச் சொன்னாங்க. என்னாலயும் தாங்க முடியலே. எழுந்து வெளிய வந்தேன். பொம்பளைங்க கடல் மாதிரியில்லே இருந்தாங்க. தாண்டித்தாண்டி வர்ரதுக்குள்ளே —அப்பப்பா! அங்கங்கே ஒவ்வொருத்தரும், உப்பு புளி மிளகா விலை கூடிப்போனதைப் பத்திதான் பேச்சு! அவங்க பேச்சிலே இருந்தே நான் புரிஞ்சிக்கிட்டேன்! தாய்மாருங்க ஆதரவு நமக்குப் பெரிய அளவு கெடைச்சாச்சு......இனிமே தாலியைப்பறிக்கிற கட்சிக்கு அவ்வளவுதான் ஆயுசுன்னு! இந்த சக்குக் குட்டியைக் கூடக் கூப்பிட்டேன். வராமேப்போயிட்டா!'' — என்று ஏளனமாக சக்குவைப் பார்த்தாள் முத்தம்மா! உடன் முனியம்மாவைப்பார்த்து,

"முனியம்மா! பந்தல் வசதியெல்லாம் எப்படி இருந்துது பார்த்தியா!'' என்றாள்.

"அடடாடா! ரெண்டுநாள் மாநாடுக்குப் போட்டதாவே தெரியலே! ரொம்பப் பிரமாதம். லைட்டு வசதிகளும், மேடையலங்காரமும் கோலாகலமா இருந்துச்சி! சேதுராசன் கலை நிகழ்ச்சியும், விஜயா கலை நிகழ்ச்சியும் உருக்கமா இருந்துதுல்லே! தொண்டர் படைங்க உழைப்புக்கும், அவங்களை கட்டு திட்டப்படுத்தி வச்சிருந்த தொண்டர் படைத் தலைவர் இளஞ்செழியனுக்கும் அவர் மனைவிக்கும் நன்றி சொல்லாமலிருக்க முடியாது.''

"பொம்பளைகளுக்காகப் பெண் தொண்டர்படைகூட இருந்தது ரொம்ப வசதியாயிருந்தது'' என்கிறபோது சீதாபதி குறுக்கிட்டு சாத்தப்பனைப் பார்த்து! "சாத்தப்பண்ணே மேயர் மோசஸ் என்ன பேசினாரு சொல்லு!'' என்றார்.

"தான் கிட்டே வேலை பார்க்கிற சிப்பந்திகளுக்குச் சம்பளம் கூட கொடுக்க முடியாத கேவலமான இழிவான — நாணயங் கெட்ட நெலைமையிலே மதுரை நகராட்சி இருக்கு; சம்பளம் கொடுக்க தனிப்பட்ட ஒரு கம்பெனிகிட்டே கடன் கேட்குது அது; சம்பளம் கொடுக்கவே யோக்யதை இல்லாத நெலைமையிலே மதுரை நகராட்சி மோசமா இருக்கு; நெல்லை நகராட்சியை மட்டும் கலைக்கிறதுன்னா என்ன அர்த்தம்? எங்கே ஜனநாயகம்ன்னு நிமிர்ந்து நின்னு கேட்டப்போ......''

"நீ கூட கொஞ்சம் நிமிர்ந்துதான் உட்கார்ந்திருப்பே இல்லியா! சரி, கந்தப்பண்ணே! பேராசிரியர் அன்பழகன் என்ன சொன்னாருன்னு சொல்லுங்க......''

"எதிர்க் கட்சிகளை மதிக்காத போக்கு காங்கிரசிலே அதிகமா வளர்ந்துப்போச்சு. மக்களுக்கும், அவர்கள் சார்ந்துள்ள அமைப்புக்களுக்கும் உரிய உரிமைகளைக் கொடுக்கிறதினாலேதான் ஜனநாயகத்தைக் காப்பாத்த முடியும்; தி. மு. க. என்ன சாதிச்சுதுன்னு கேட்குறாங்களே, இந்த நாட்டிலே ஜனநாயகம் முற்றிலும் செத்துப் போகாமல் காப்பாற்றிக்கொண்டிருப்பதுவே தி. மு. க-தான்! காந்தியார் சொன்னபடி கதரை வளர்க்காமல், ஆலைகளை வளர்த்து, அதனால் ஆலை அரசர்களை எதனால் வளர்க்கணும்? இந்த நாடு இந்த நெலைமைக்குவந்ததுக்குக் காரணம், சொன்னதுங்களை நிறைவேற்றாததினாலும், சொல்லுறதுகளை உறுதியாச் சொல்லாததினாலும்தான்! இவங்கல்லாம் சோஷியலிசம் பேசுறாங்களே! சோஷிலிசம் வருமா? நெலைக்குமா?-ன்னு பேசினாரு!

"சரி! வேலப்பன்! நீ கலைஞர் கருணாநிதி என்ன சொன்னாருன்னு கொஞ்சம் சொல்லு!

"நாட்டிலுள்ள தற்போதுள்ள நிலைமைகளை விரிவா விளக்கிக் காட்டிட்டு 1967லே நாம் ஆட்சி அமைக்கத்தான் போறோம்! அதற்கான அறிகுறிகள் எல்லாம் அரும்பிட்டுது; 7, 8 மாசத்துக்கு முந்தி "மானத்தோடு வாழ்வோம்ன்னு இசைத்தட்டு மூலம், வெளிநாட்டு உதவி கூடாதுன்னு சொன்ன காமராசரின் ஆட்சியோடதான், சுப்பிரமணியம் அமெரிக்கா போயி, வெளி உதவிக்கு ஒப்பந்தம் செய்துக்கிட்டு வந்தேன்னு சுப்பிரமணியம் சொன்னாரே! அப்ப, காமராஜரோட அந்த மானம், எங்கே போச்சுன்னு கேட்டாரு!''

எனும்போது முத்தம்மாள் குறுக்கிட்டு,

"சத்தியவாணிமுத்து பேசறப்போ, காங்கிரசு ஆட்சியிலே பொம்பளைங்கதான் ரொம்பக் கஷ்டப்படுறாங்க. பாதிக்கப்படுறதும் அவுங்கதான்; ஆகையினால 67 தேர்தல்லே, அந்த ஆட்சியை அடிச்சி விரட்டணும்''னு சொன்னது எவ்வளவு பொருத்தம் பார்த்தியா முனியம்மா'' என்றாள்.

"ஆமாம்!'' என்று ஒப்புதல் தந்தாள் முனியம்மாள். அப்போது, கந்தப்பன் வேலப்பனைப் பார்த்து "கோவிந்தசாமி எம். எல். ஏ,. சொன்னதை நீ எப்படிப் புரிஞ்சிக்கிட்டே?''—என்றான்.

"தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் என்னென்னதை செய்யும்ங்கிறதைத்தான் அந்தக் காலத்திலிருந்து பேசிக்கிட்டு வருது; அண்ணா ஏழெட்டு வருசத்துக்கு முந்தியே 'இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலைவைத்தால் நிறைய லாபம் கிடைக்கும்னு சொன்னார்: இப்பதான் இந்த சர்க்கார் இதைச்செய்ய யோசிக்குது. அப்பவே காவிரி வட்டத்து எண்ணெய்பற்றி அண்ணா சொன்னார்; இப்பதான் அதுக்குக் காங்கிரஸ் முயற்சிக்குது; அன்னைக்கு அண்ணா சொன்னதைத்தான் இன்னைக்கு காங்கிரஸ் செய்ய நினைக்குதுன்னு தெளிவா, விளக்கமா சொன்னார். சரிதானே!' —என்றான் வேலப்பன்.

சாத்தப்பன், சீதாபதியைப் பார்த்து "அண்ணே! எதிர்க்கட்சிக்காரங்களைப்போலவே பேசிக்கிட்டு, ஆனால் உள்ளுக்குள்ளே காங்கிரசை ஆதரிக்கிறவங்களை நம்பக் கூடாது; ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்னு கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ. சொன்னாரே, நீ அதைப்பத்தி என்ன நினைக்கிறே?' என்றான்.

"நினைக்கிறதுக்கு என்ன இருக்கு? சில கட்சிங்க அப்படித்தானே வேஷம்போடுது—எச்சரிக்கையா இருக்கவேண்டியதுதான்!'' —என்றான் முத்துசாமி.

"அது சரி! நாட்டில் ரெண்டே ஜாதிதான் இருக்குது; ஒண்ணு உழைக்கிற ஜாதி! இன்னொன்னு உழைக்காமலேயே உழைப்பைச் சுரண்டிச் சாப்பிடுற ஜாதின்னு மதுரை முத்து சொன்னாரே கவனிச்சிங்களா!—என்று குறுக்கிட்டுக் கூறினார் சீதாபதி.

"ஆமாமாம்! ஜாதி ஜாதின்னு ஜாதி வெறியைத் தூண்டுவிட்டு, பிடுங்கின வரைக்கும் லாபம்ன்னு இருக்கிறவங்களுக்குச் சரியான சூடு'! என்றாள் முத்துசாமியின் மனைவி முனியம்மா!

"பாத்தியா, தங்கச்சிக்குக் கோபம் வந்துட்டுது, நம்மளை வுட்டுட்டு வேறெ ரெண்டு சாதியைப் பத்திச் சொல்லிட்டாரேன்னு. ஏன் தங்கச்சி, அப்படித்தானே! என்றார் சீதாபதி.

"அதெல்லாம் இல்லேண்ணே! காலங் கெடக்கிற கிடையிலே ஜாதியைப் பத்திப் பிரமாதப்படுத்திக்கிட்டுப் போறாங்களேன்னுதான் நினைச்சேன்!" — என்று சமாதானம் கூறினாள் முனியம்மா.

வேலப்பன் கந்தப்பனைப் பார்த்து, "இந்த இருபது வருஷக் காலத்திலே 2000 பேருக்கு மேலே துப்பாக்கியாலேயே சுட்டுச் செத்துப் போயிருங்காங்கன்னும், பதினாலு மொழிக்கும் அரசியல் சட்டத்திலே அந்தஸ்து கொடுத்திருக்கிறோம்னும் சொல்லிப்புட்டு, பாராளு மன்றத்திலே இந்தி அல்லது இங்கிலீஷ் தவிர வேறு மொழியிலே பேச முடியாத நிலைமை ஒரு சர்வாதிகாரத் தன்மைங்கிறதையும் சமத்துவம் இல்லைங்கிறதையும் தான் குறிக்குதுன்னு இளம்வழுதி பேசினது உண்மை நிலையை அப்படியே படம் பிடிச்சமாதிரி இல்லே" என்றான்.

"சரி, நான் இப்ப அண்ணா என்ன சொன்னாருன்னு சொல்லப் போறேன்! கேட்டுக்குங்க!" என்று தொடங்கினார் சீதாபதி.

"காமராஜ் 20 லெட்சம் போதாதுன்னு, இன்னும் 30 லெட்சம் ரூபாய் நிதி திரட்டுகிறார் நம்மை எதிர்க்க. நாமும் 2 ரூபாய், ஒரு ரூபாய்என்று திரட்டுகிறோம்; இந்த நிதிகள் யெல்லாவற்றையும்விட, உங்களின் பேராதரவு—மக்களின் பேராதரவு-என்ற பெருநிதி நமக்கு இருக்கிறது; நாம் இங்கே வரும்போது, நம்மில் சிலருக்கு, காங்கிரசை ஏன் தோற்கடிக்கவேண்டும்ன்னுகூட சந்தேகம் இருந்திருக்கலாம்; ரெண்டுநாள் பேச்சைக் கேட்டதுக்கு அப்புறம், இப்ப ஏன் தோற்கடிக்கணும்னு இல்லே, எப்படித் தோற்கடிக்கணும்னு எல்லாரும் இருக்கீங்க; சில ஆயிரம் போலீசை மட்டுமே வச்சிக்கிட்டிருக்கிறஅரசாங்கம்ங்கிற சிலபேருகிட்டெ, பல ஆயிரம், பல லெட்சம்னு இருக்கிற மக்கள் எதுக்குப் பயப்படுறாங்கன்னா, ஒண்ணுசிறை, இன்னொண்ணு சாவு. இந்த ரெண்டுக்கும் பயந்துதான் கொஞ்சம் பேருக்கு அடங்கிப்போறாங்க.

கழகத்தைப் பொறுத்த வரைக்கும் சிறைக்கும் பயப்படத் தேவையில்லை. சாவுக்கும் பயப்படத் தேவையில்லை. போதுமான அளவு—வேண்டிய அளவு சிறையைப் பத்திய அனுபவம் நம்ம எல்லாருக்கும் கெடைச்சுட்டுது. கொடுக்க வேண்டிய அளவுக்கு உயிர்களையும் பலிகொடுத்துட்டோம்.

சிறைக்கும் சாவுக்கும் பயப்படத் தேவையில்லாத நிலைமைக்கும் வந்தாச்சு.

எனவே, இந்த அரசியல் புரட்டர்களையும், புரட்டுக்களையும் இனியும் இந்தத் தமிழ் நாடு அதிக நாளைக்கு விட்டுவைக்காது. நான் சொன்னது சரிதானா! —என்று நிறுத்தினார் சீதாபதி. ஏகாம்பரம் குறுககிட்டு ரொம்பச் சுருக்கமா சொல்லிட்டே! என்று அங்கலாய்த்துக் கொண்டு, "எஸ். எஸ். ஆரோடெ மணிமகுடம், தென்பாண்டி வீரன் நாடகங்களும் கண்ணுக்கும், கருத்துக்கும் நல்ல விருந்தா இருந்துது!" என்று சொல்லி நிறுத்தினார்.

"ஆமாம்! ஆனா எனக்கு ஒரே ஒரு குறை! ரெண்டு நாள் மட்டும் மாநாடு போட்டதினாலே, எல்லாத் தலைவர்களுக்கும் பேசுறதுக்குப் போதிய நேரம் கிடைக்கலே! அவுங்கவுங்க கொஞ்ச நேரம் மட்டும் பேசினது நமக்கே என்னமோபோல இருந்துதே! அவுங்களுக்கு மட்டும் குறையிருக்காதா என்ன? மாவட்டச் செயலாளர் தர்மலிங்கமும், சாரதியும், தேவராசனும் நல்லபடியா முயற்சி எடுத்துக்கிட்டு வெற்றிகரமா மாநாட்டை நடத்தினதையும் நம்ம மறக்க முடியாது!" என்றார் சாத்தப்பன்.

"இன்னொன்னு தெரியுமா! மதுரை மாவட்டச் செயலாளர் முத்துவும், முகவை மாவட்டச் செயலாளர் தென்னரசும் பந்தலையும்,லைட்டுஅலங்காரத்தையும் சுத்திசுத்திப் பார்த்துக்கிட்டிருந்தாங்க! நானும் பின்னாலேயே போயி பார்த்தேன்! வேலூர் மாநாட்டையும்விட இன்னும் சிறப்பா, அழகா, வசதியா சிவகெங்கை மாநாட்டை நடத்திடனும்ங்கிற முடிவை, அவுங்க பார்வையிலே யிருந்தே நான் புரிஞ்சிக்கிட்டேன்?"—என்றார் சீதாபதி.

நீலகண்டம் குறுக்கிட்டு, "ஏன் மிஸ்டர் சீதாபதி! ஊர்வலம் எப்புடி இருந்துதுன்னு ஒருத்தருமே சொல்லலியே!"—எனக் கேட்டார்.

வேலப்பன் இடைமறித்து "கழக ஊர்வலம்ன்னா அதுக்குத் தனியா ஒரு விளக்கம் கொடுக்கனுமா என்ன? வழக்கம்போல எல்லா சிறப்பும் இருந்துது! ஊர்வலம் விஷயத்திலே நாமும் கொஞ்சம் பொறுப்போட நடந்துக்கிட்டா நல்லதுன்னு தோணுது" என்றார்.

"சரி, சரி! இப்ப எல்லாரும் என் வாயைக் கிண்டத்தானே வந்ததா சொன்னிங்க. அவுங்கவுங்களும் அழகான கருத்துக்களை எடுத்துச் சொல்லத் தெரிச்சுக்கிட்டிங்க! இதே போல, நீங்கசந்திக்கிற ஒவ்வொருத்தருகிட்டேயும், நாட்டு நெலைமை, காங்கிரசை விழ்த்தவேண்டிய அவசியம், 1967லே நாம் செய்யவேண்டிய கடமை எல்லாத்தையும் கவனப்படுத்துங்க; நான் வரட்டுமா?— என்று எழுந்தார் சீதாபதி.

"சரிண்ணே! எங்களுக்கும் கொஞ்சம் வேலையிருக்கு!" நாங்களும் "வர்றோம்" என்று மற்றவர்களும் கிளம்பினார்கள்.

"நமக்கு ஒவ்வொரு நாளும் வேலை இருக்கத்தான் செய்யும்; இருக்கிற வேலைக்கு இடையே...... எடுத்துச் சொல்ல வேண்டியதுகளையும் எடுத்துச் சொல்லுங்க. என்னா தங்கச்சி, உனக்கும்தான்" என்று சிரித்துக்கொண்டே புறப்பட்டார் சீதாபதி.

நீலகண்டமோ, தான் மாநாட்டுக்குப் போகாததற்கு யாரிடம் வருத்தம் தெரிவிப்பது என்று நினைத்துப் பூங்காவிலே கவலையோடு உட்கார்ந்துவிட்டார்.

—சீயேயெம்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.